# திராவிடநாடு



திராவிடநாடு

19-ம் பக்கத் தொடர்ச்சி

கருதுகிறார், அதற்காக ஆச்சாரியாரைக் கண்டிக்கக் கிளம்புகிறார்.

நாம் கண்டிக்க நேரிடும்போது, என்ன சொல்கிறோம்.

குல்லூகபட்டர்
சாணக்கியர்
வர்ணாஸ்ரமி
சனாதன-வெறியர்

என்று பல கூறுவோம். தம்பி! நினைவில் வைத்துக்கொள்.

ஒரு குழந்தையைக் கொஞ்சுகிறோம்—செல்லப் பெயரிட்டு அழைத்துக் கொஞ்சுகிறோம், என்னென்ன சொல்கிறோம்,

வாடா என் குரங்கே!
கிட்டே வாடா கோட்டானே!

என்று சொல்வோமா!

தங்கக் கட்டியே
வைர மணியே
வண்ண நிலாவே
பேசும் ரோஜாவே

என்று ஏதேதோ பேசுகிறோம். அதுபோலவே, கண்டிக்கும்போது, பயன்படுத்தப்படும் சொற்களையும், நினைவிலே கொண்டு, வா.

தம்பி! இனிக்கேள், இந்தவேதனை தரும் விஷயத்தை.

ஆச்சாரியாரைக் கண்டிக்கக் காமராஜர் கிளம்பினார்; என்ன கூறிக் கண்டித்தார், தெரியுமா?

என்ன இந்த ராஜகோபாலாச்சாரியார் இப்படிக் கெட்டுவிட்டாரே! வர, வர, இராமசாமிப் பெரியார் தரத்துக்கு கீழே இறங்கிவிட்டாரே!

என்று கண்டிக்கிறார். எல்லா இதழ்களிலும், வெளியிட்டனர்; ஒன்றுக்கேனும் காமராஜர் மறுப்பு அளிக்கவில்லை.

பெரியார் பற்றிக் காமராஜரின் எண்ணம் எப்படி இருக்கிறது என்பது தெரிகிறதல்லவா!

எவ்வளவு ஏளனம் தொனிக்கிறது, அந்த ஏசலில் என்பதைப் பார்த்துவிட்டு, பெரியார் எத்துணை மும்முரமாக இந்தக் காமராஜருக்கு ஆதரவு திரட்டுகிறார் என்பதையும் பார்க்கும்போது, எனக்கு வேதனையாக இருக்கிறது, முன்னேற்றக் கழகத்தின் மீது இருக்கும் கோபம் காரணமாகக் கருத்துக் குழம்பியுள்ள தோழர்களுக்குத் தவிர, மற்ற தி. க. வட்டாரம், உள்ளபடி வேதனையும் வெட்கமும் அடையத்தான் செய்கிறது.

**பெரியார் என்பதற்குக் காமராஜர் கொள்ளும் பொருள், கெட்டுவிட்ட ஆச்சாரியார்! நியாயந்தானா! சகித்துக் கொள்ள முடிகிறதா!** என்று கேட்கத்தோன்றுகிறது. எனக்குத்தான் அந்த வாய்ப்பும் உரிமையும் இல்லையே, நான் என்ன செய்வது! யாருக்கேனும் இருக்கக்கூடும், அவர்களேனும், கேட்கட்டும்.

ஆச்சாரியார் தரம் கெட்ட நிலையில் இருக்கிறார்—இதை விளக்கக் காமராஜர் கூறுவது, பெரியார் அளவுக்கு இறங்கிவிட்டாரே, என்பது.

இன்னும் வெளிப்படையாகவே பேசத் துணிந்து காமராஜர், தஞ்சையில் சென்ற கிழமை பேசும்போது சொல்கிறார்,

திராவிடர்கழகம் தேர்தலில் ஈடுபடாமலிருப்பது, என்மீது கொண்ட அன்பு காரணமாக அல்ல! தேர்தலில் நின்றால் தோற்றுவிடுவோம் என்றுதிராவிடகழகத்துக்கு நிச்சயமாகத் தெரியும். அதனால் பயந்துபோய், புத்திசாலித்தனமாக, தேர்தலில் நிற்கப் போவதில்லை என்று திராவிடர் கழகம் சொல்லுகிறது.

இந்தக் கேலி மொழியா, கருப்பஞ்சாறாக இனிக்கிறது, என் அருமை தி. க. தோழர்களுக்கு! நண்பர்களே! நீங்கள் வலிய வலியச் சென்று வழங்கும் ஆதரவு, காட்டும் பரிவு, சொரியும் அன்பு, மொழியும் பாசம், படைத்திடும் நேசம், என்னவிதமான மனப்போக்கைக் காமராஜருக்கு ஊட்டிவிட்டது, பாருங்கள். என்மீது உங்களுக்கு நிரம்பக் கோபம் இருக்கிறது, நான் அதனை உணருகிறேன்; உள்ளம் வருந்தாத நாள் இல்லை — ஆனால் அதன் காரணமாக, காமராஜரிடமிருந்து இத்துணை இழி மொழிகளைக் கேட்டுக்கொள்ள வேண்டுமா!! எண்ணிப் பாருங்கள்.

ஏதோ நான் தமிழருக்குப்பாடுபடுபவன் என்பதால் பெரியார் என்னை ஆதரிக்கிறார் என்று காமராஜர்பேசியிருக்கக்கூடாதா! பெருந்தன்மைதெரிந்திருக்குமே! கேட்க, இனிக்குமே! அவர்களுக்குத் தேர்தலில் தோல்வி ஏற்படும் என்பது தெரியும் — அதனால் என்னை ஆதரிக்கிறார்கள். என்றல்லவா ஏசுகிறார்.

மருதப்பன், மாப்பிள்ளைத் தோழனாக இருப்பது ஏன் தெரியுமா? இந்த மணப் பெண் மருதப்பனைத் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று கூறிவிட்டாள்—எனவே, மருதப்பன், எனக்கு, மாப்பிள்ளைத் தோழனானான்.

இப்படிக் கலியாண வீட்டிலே பேசினால், போலீஸ் வந்து, கலகத்தை அடக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடும்—நாட்டிலே காமராஜர் இதனைப் பகட்டத்துடன் பேசி வருகிறார்—நண்பர்களே! நீங்களோ, நெறித்த புருவத்தினராகிறீர்கள், என்னைக் காணும்போது!!

யார் அழைத்தார்கள்?
தானாக வந்தார்கள்!
வேறு வழி என்ன இருக்கிறது?
வேறு வேலை என்ன இருந்தது?
சும்மாவா, வந்தார்கள்!

என்று, இந்த ஏச்சு, மளமள வென்று வளரும் — ஒருநாள் உட்கார்ந்து இதற்காக உளம் வருந்த நேரிடும்.

மூவர் முரசு அறைந்ததில் என்னைப் பொறுத்தமட்டில், இந்தப் புதியகட்டத்தில் காமராஜர் காலடி எடுத்து வைப்பது தெரிகிறது.

இவ்வளவு அதிகமாக நம்மோடு பயணம் நடத்தியாகி விட்டது. இனி இவர்களை என்ன கண்டித்தாலும் கோபித்துக்கொண்டு எங்கே போக முடியும்!

என்று காமராஜர் எண்ணிக்கொள்வதாகத் தெரிகிறது.

தம்பி! உள்ளபடியே, காமராஜரின் இந்த இரு தாக்குதலையும் எடுத்துக்காட்டி சில காங்கிரஸ் நண்பர்களே ஏளனம் செய்தனர்; நான் தலையைத் தொங்கவிட்டுக் கொள்ளாமல் என்ன செய்வது!

எனவேதான், இத்தாலி நாட்டிலே இரு வெறியர்கள் பல சிறார்களைச் சித்திரவதை செய்யக் கிளம்பியபோது, வீரமாகப் போரிட்டவனிதைபற்றிப் படித்த போது, எனக்கு, இங்குள்ள அரசியல் சூழ்நிலையும், அதிலே நாம் மேற்கொண்டுள்ள பணியும், நினைவிலே வந்தது உன்னிடம் சொன்னேன்; வேறு யார் தம்பி, இருக்கிறார்கள் நான் கூறுவதைக் கேட்க!!

அன்பன்,

அண்ணாதுரை

# வெற்றி!

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [11—11—56] தனிப் பிரதி 2 அணு [ இதழ் 19

போர் நின்றுவிட்டது, உலகு ஆறுதல் பெறுகிறது. எகிப்தில், ஈடன் மூட்டிய தீ, உலகைச் சுட்டுச் சாம்பலாக்கும் பெரும் போராக வடிவெடித்துவிடுமோ என்று கலங்காத மக்கள் இல்லை, அவர்கள் மனம் பீதியடையத்தக்க விதமான செய்திகள் ஒரு கிழமை கொப்பளித்த வண்ணமிருந்தன, கொடுமை தலைவிரித்தாடுவதை, வெறி கொக்கரித்துக் கூத்தாடுவதை, அறம் துரத்தப்படுவதை, நீதி நொருக்கப்படுவதைக் கண்டு, மக்கள் மருண்டனர், நல்லோர் நடுக்குற்றனர், உலகின் எல்லாத் திசைகளிலும், ஈடன் மேற்கொண்ட இந்த வெறிச் செயலைக் கண்டிக்கலாயினர்.

அக்ரமம்! அநீதி! அடாதசெயல்! அடவிமுறை! —என்று கூறினர் அறிவாளர்கள்.

பேரறிவாளர் பெர்ட்ராண்டுரஸ்ஸல், பிரிட்டிஷ் சர்க்காரின் பைத்யக்காரத்தனம் இது என்று கண்டித்தார். அமைச்சர் அவையிலேயே கண்டனம்! பார்லிமெண்டிலே பெரும் எதிர்ப்பு. மான்செஸ்டர் கார்டியன் போன்ற, அமைதியான குரலெழுப்பும் இதழ்களெல்லாம் கூடக் கொதித்தெழுந்தன!

கொலைபாதகர்கள்! என்று ஈடன் கூட்டத்தை பிரிட்டிஷ் பாராளு மன்றத்திலேயே, பண்பாளர் பலரும் கண்டித்தனர்.

பிரிட்டன் பல சமயங்களில் பலவற்றை இழந்து தவித்ததுண்டு; ஆனால் இன்றுபோல், என்றும் அறநெறியை விட்டு விலகி அல்லற்பட்டதில்லையே, அந்தோ! நாட்டை நாசப் படுகுழியில் தள்ளிட, நாகரீகத்தை அழித்திட, நானிலம் போற்றிடும் சீலத்தைச் சிதைத்திடத் துணிந்தாரே இந்த ஈடன்! என்னே இவர்தம் கெடுமதி!—என்று எதிர்க் கட்சியினர் உள்ள உரத்துடன் கண்டித்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் அழகழகாகச் சமாதானம் பற்றி அறிவுரை ஆற்றிய வாயால், பிடி! சுடு! தாக்கு! என்று பேசவும் துணிவு வந்ததே!—என்று இடித்துரைத்தனர்.

இஸ்ரேலும் — எகிப்தும், ஒன்றோடொன்று மோதிக்கொள்வதைத் தடுக்க, பிரிட்டன் படை அனுப்பி இருக்கிறது என்று பேய் நியாயம் பேசினர், நோய் வாய்ப்பட்டதால் நாடி முறுக்கும் நல்ல தெளிவும் இழந்து கிடக்கும் ஈடன்.

வலிவிழந்த நிலையிலே, எதேச்சாதிகாரப் பேராசை, ஏகாதிபத்திய வெறி மனதைக் குடைந்திடவே, பொறுப்பையும் மறந்து, போர் மூட்டிவிட்டார், பேச்சிலே அமைதிகாட்டி, பிறநாட்டுத் தலைவர்களை எல்லாம் நல்வழிப்படுத்தும் 'ஆசான்' போல நடந்துவந்த ஈடன்.

நாசர் தன் நாட்டு உரிமையைக் காப்பாற்ற முனைந்தார்! இதைத்தடுத்திட வெறியருக்கன்றி வேறொருவருக்கும் எண்ணம் தோன்றாது.

சூயஸ் பகுதியில், தமக்கு இருந்துவந்த 'ஆதிபத்யம்' அழிந்து படுகிறது என்பதால் ஏற்பட்ட எரிச்சலை உள்ளத்தில் பொங்கவிட்டுக்கொண்டு போர் மூட்டி, எகிப்தை அழித்தொழிக்க சூதான திட்டமிட்டுக் கிளம்பினர், பிரிட்டனின் சுகபோகத்துக்காகப் பிற எல்லா நாடுகளும் சுரண்டப்படவேண்டியதுதான் என்ற ஏகாதிபத்திய வெறிபிடித்த ஈடன்.

இசுரேல், கருவியாகக் கிடைத்தது; தட்டிவிட்டார்; மோதவிட்டார்; இடையே புகுந்து, எகிப்தைத் தாக்கினர்.

எகிப்து, பிரிட்டனை எதிர்த்து நிற்கக்கூடிய 'இராணுவபலம்' பெற்றில்லை; ஆனால் எஃகு உள்ளம் கொண்ட எகிப்தியர், கடைசிச் சொட்டு இரத்தம் உள்ளமட்டும், கடும்போரிட்டு, தமது சுதந்திரத்தைக் காத்திடத் துணிந்தனர்; வெண்ணிறப் பாலைவன முழுவதும் செந்நிறச் சதுப்பு ஆகட்டும், எமது மூச்சு இருக்குமட்டும், வெளிநாட்டவன் எமது மண்ணிலே கொட்டமடிக்க விடமாட்டோம், என்று முழக்கமிட்டார் நாசர்—எகிப்து நாட்டு இளைஞர் மட்டுமல்ல, அரபு உலகத்து ஆற்றல்மிக்கோர் மட்டுமல்ல, அகில உலகிலும் அறமறிந்தோர், உண்மையின் மாண்பினை உணர்ந்தோர் யாவரும், எகிப்துக்கு ஆதரவு திரட்ட முனைந்தனர். சோவியத் நாடு, உறுதியான குரலில் எதேச்சாதிகாரத்தைக் கண்டித்தது.

பிரிட்டனுக்குப் பின்னோடும் தோழனாகவே அமெரிக்கா இருக்கும்என்றகருத்துவெள்ளையர்உலகில்செல்வாக்குப் பெற்றுவிட்டது; எனவே ஈடன், அமெரிக்கா இதிலே தலையிடாது—ஐ. நா. வும் வாய்மூடிக்கிடக்கும்; மணிக்கணக்கிலே, எகிப்து வீழ்ந்துபடும், நாசர் விரட்டப்படுவார், அல்லது சுட்டுத்தள்ளப்படுவார்; பிறகு இருக்கவே இருக்கிறார், இன்பம் கானாது ஏங்கித் தவித்துக்கிடக்கும் பரூக்; பிடித்திழுத்து வந்து பட்டத்தில் உட்காரச் செய்துவிட்டு, புதிய பட்டயம் பெற்று, சூயசைக்கட்டி ஆளலாம் என்றெல்லாம் மனப்பால் குடித்தார். அந்தப் போதையுடனேயே போர் நடத்திப்பார்த்தார். ஆனால் அமெரிக்கா, பிரிட்டனுக்குப் பக்கமேளம் கொட்ட மறுத்துவிட்டது; போர் நடத்துவதை அனுமதிக்க முடியாது; என்று ஐசனவர் ஆண்மையுடன்

எடுத்துரைத்தார். ஐ. நா. சபை வீறுகொண்டெழுந்தது—போர் நிறுத்துகிறீர்களா, இல்லையானல் ஐ. நா. படையை அனுப்பிப் புத்தி புகட்டவா? என்று கேட்டது.

கெய்ரோ மீது குண்டு வீசிக் கொடுமை செய்கிறீர்களே, இலண்டன் மீதும் பாரிஸ் மீதும் வீசிட எம்மிடம் உள்ள குண்டுகள் எப்படிப் பட்டவை தெரியுமா...தெரிந்து கொள்ளவிரும்புகிறீர்களா? என்று ரஷியா கேட்டது.

நாசர்,—இம்சைக்கு ஆளான இலட்சியவாதி—நாங்கள் அனைவரும் அவர் பக்கமே திரண்டு நிற்கிறோம் என்று பல நாடுகள் முன்வந்தன. உருட்டு விழியும் மிரட்டல் பேச்சும் இனிச் செல்லாது என்பதை அறிந்துகொண்டஈடன், போர் நிறுத்தம் செய்துவிடுவதாக அறிவித்துவிட்டார்.

போர், இப்போதைக்கு நின்றுவிட்டது—ஆனல் பிரச்சினைகள் போர்க்கோலத்திலேயே உள்ளன.

சினய் வட்டாரம் — எகிப்தின் பிடியில் இருந்தது — அது இது போது இசுரேல் வசம் இருக்கிறது.

எந்தச் சூயஸ் பிரச்சினை சூறுளியை மிஞ்சும் சூது பிறந்திடச் செய்ததோ, அந்தச் சூயஸ் வட்டத்தில், போர்ட் சையித் பிரிட்டிஷ் வசம் சிக்கிக் கிடக்கிறது.

பிரிட்டிஷ், பிரன்ச்சு, இசுரேல் படைகள், எகிப்தில் இருக்கின்றன!

இந்த அநீதிகள் துடைக்கப்பட்டாக வேண்டும்.

வெளி ஏறமாட்டோம் என்று வெறிகாட்டிப் பேசிட, பிரிட்டன் துணியுமேல், ஐ. நா. படை, அதற்குத் தக்க பதிலடி தரவேண்டும்.

உலகு அதைத்தான் எதிர்பார்க்கிறது.

பேராபத்துத் தாக்கியபோது கலங்காது நின்று, தாயகத்தின் உரிமையை, மாண்பை, தன்மானத்தைக் காத்து நின்ற ஆற்றல் மிக்க நாசரை, வாழ்த்துகிறோம்.

குருதி கொட்டிய எகிப்தியருக்கு வீர வணக்கம் செலுத்துகிறோம்.

போர் நிறுத்தத்துக்கான துணிவு காட்டி, தூய்மைகொண்டு, வெற்றிபெற்ற ஐசனவரைப் பாராட்டுகிறோம்.

ஐசனவர் பெற்ற முதல் வெற்றி—முதல்தரமான வெற்றி—பிரிட்டனின் தலையில் தட்டி உட்கார வைத்து, போரை நிறுத்திய செயல்தான் — அவர் ஸ்டிவன்சனைத் தோற்கடித்து, அமெரிக்க குடி அரசுத் தலைவராகி இருப்பது அவர் பெற்ற இரண்டாவது வெற்றிதான் — வரிசையிலும் சரி தரத்திலும் சரி.

கொடுமையாளர்களின் கொட்டம் ஒழிக்கப்படட்டும்; உலக சமாதானம் ஓங்கட்டும்; ஐ. நா. சபையின் வெற்றிகள் வளரட்டும்!

*

## டிசம்பர் 15

ஏவ்வளவு தொல்லைதர முடியுமோ அவ்வளவும் தந்துவிட்டு, ஏத்துணை அல்லற்படவேண்டுமோ அவ்வளவையும் அனுபவிக்கச் செய்துவிட்டு; அலட்சிய புத்தியுடனும் ஆணவப் போக்குடனும், பிரச்சினையைப் பரிகசித்துக்கொண்டிருந்த காமராஜ் துரைத்தனம், தேர்தல் நெருங்குகிறதே ஏன்ற திகிலால் தாக்கப்பட்டு, சர்க்கார் ஊழியர்களுக்கு உதவி செய்வதாகப் பாவனை காட்டிற்று.

சர்க்கார் ஊழியர்கள், பலகாலமாக மத்திய சர்க்காரில் வேலை பார்ப்பவர்களுக்குத் தரப்படும் வசதிகள் தமக்கும் தரப்படவேண்டும் — மாற்றுந்தாய் பிள்ளைகள்போல, ஒடுக்கப்பட்டோர்போலத் தம்மை நடத்துவது நியாயமல்ல ஏன்பதைத்தான் ஏடுத்துரைத்து வந்தனர்.

குறைந்தபட்சமாக, 'பஞ்சப்படி'யிலாவது மத்திய சர்க்கார் ஊழியர்கள் பெறுவதுபோலத் தமக்கும் தரவேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். வாழ்க்கைச் செலவினம் வளர்ந்ததால் ஏற்பட்டுவிட்ட வாட்டத்தை, வேதனைக் குரலில் எடுத்துரைத்தனர்.

இதற்குப் பெரும்பொருள் தேவைப்படுமே, எங்கே போவது ஏன்று திகைக்கத் தேவை இல்லை, வழிவகை கூறுகிறோம் துரைத்தனத்தாருக்கு என்று விளக்கமும் அளித்தனர்.

எல்லாவற்றுக்கும் 'ஆகட்டும்' ஏன்ற மாமந்திரம்தான் உச்சரிக்கப்பட்டது.

கிளர்ச்சி—வேலை நிறுத்தம்—ஏன்று ஏதாவது கிளம்பினல் ஒடுக்கிவிடுவோம், ஒழித்துக்கட்டுவோம் என்று மிரட்டவும் காமராஜர் ஆட்சி கூசவில்லை.

இப்போது, துரைத்தனம், தன் தாராளத்தைக் காட்டுவதாக ஏண்ணிக்கொண்டு, பஞ்சப்படியில் ஐந்து ரூபாய் கூட்டித்தருவதாகக்கூறுகிறது.

இது எமக்குப் பெருத்த ஏமாற்றத்தையும் எரிச்சலையும் தருகிறது; எமது பொறுமை கேலிசெய்யப்படுகிறது, எமது வேதனையைக்கண்டு இரக்கம் காட்ட மனமில்லை — தோலை வீசி எறிந்து, பழச் சுவை இருக்கும், பெற்று மகிழுங்கள் என்று பேசுகிறீர்கள், அமைச்சர் பெருமானே! இது அடுக்காது! அறமாகாது!! — என்று மனம் குமுறிக் கூறுகின்றனர் வேதனைக்கு ஆளான சர்க்கார் ஊழியர்கள்.

கேட்டது ரொட்டி, கிடைத்தது கல்! என்று மனம் நொந்து பேசுகின்றனர்.

சர்க்கார் ஊழியர் கழகம், துரைத்தனம் 'கஞ்சத்தனம்' காட்டி இருப்பதைக் கண்டித்துவிட்டு, தங்கள் கோரிக்கையை டிசம்பர் 15க்குள் நிறைவேற்றிவைக்கும்படி மீண்டும் வலியுறுத்தி இருக்கிறது.

காமராஜர் சர்க்கார், கருணை காட்டுகிறதா அல்லது ரூபாய் ஐந்து கொடுத்தது போதாதா, போ! போ! என்று மிரட்டுகிறதா என்பது போகப்போகத்தான் தெரியும்.

சஞ்சலத்துக்கு ஆளாகியுள்ள சர்க்கார் ஊழியர்களின் நியாயமான வேண்டுகோளை, நிராகரித்து, நீங்கா 'வடு' ஏற்படுத்திக்கொள்ளவேண்டாமென்று துரைத்தனத்தாருக்கு எடுத்துக்கூற எல்லா முற்போக்குக் கட்சிகளும் கடமைப்பட்டுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகம், அந்தக் கடமையைக் களிப்புடன் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இன்று, காட்டிவரும் ஆதரவை விட மேலும் விறுவிறுப்பான முறையில். தி. மு. க. சர்க்கார் ஊழியர்களின் பிரச்சினைக்கு மக்களைத் திரட்டி ஆதரவு தேடத்தயங்குவதற்கு உள்ள காரணம், காமராஜர் சர்க்காருக்கு, நமது கழகத்தின்மீது உள்ள கசப்பும் கடுப்பும், நிலைமையில் நெருக்கடியை உண்டாக்கிவிடுமோ என்பதுதான். நமது இதயம், சர்க்கார் ஊழியரின் பக்கம் இருக்கிறது; நமது ஆதரவு அவர்கட்கு நிரம்ப உண்டு; தங்கள் உரிமையைப் பெற அவர்கள் நடத்த முன்வரும் எந்த நீதியானகிளர்ச்சிக்கும், நமது கழகம், நேசக்கரம் கொண்டு உதவி அளித்தே தீரும்.

★

காஞ்சீபுரம்

11—11—'56

# தம்பி !

படித்து முடித்ததும், அந்தப் பாவை என் மனக்கண்முன் தோன்றிடவே "வீர வணக்கம், வனிதாமணியே! உலகிலே மாண்பும் அறமும் அடியோடு அழிந்து படாமலிருப்பது, உனபோன்ற ஆரணங்குகள் ஒருசிலர் அவ்வப்போது ஆற்றலுடன் பணிபுரிவதனாலேதான்! தாய்க்குலத்தின் தனிப்புகழைத் தரணிக்கு விளக்கிய ஒளி விளக்கே! உன் தாள் பணிகிறேன்! தையல் என்போர் மையல் ஊட்டும் மைவிழியும், களிப்பூட்டும் கோவ்வைக் கனிவாயும், தாலாட்டும் திருக்கரமும் மட்டுமே கொண்டவர்கள், அவர்கள் மெல்லியலார், சுடு சொல் கூறிடக் கேட்டாலே அவர்தம் அகம் அல்லற்படும், முகம் போலிவிழந்து விடும், ஆனிச்சப்பூ போன்றோர் அரிவையர், என்று மட்டுமே பேசுவர். ஆனால் பிறர் திகைத்துப் போயிருக்கும் நேரத்தில், அம்மையே! நீ காட்டிய அஞ்சா நெஞ்சு, அவனிக்கே ஓர் அணி எனலாம்!! வாழ்க உன் திருப்பெயர்! வளர்க மகளிர் மாண்பு"—என்றெல்லாம், கூறிக் கூறி வியந்து பாராட்டினேன். ஆமாம், தம்பி, அனைவருமே போற்றிடத்தக்க வீரச் செயலைப் புரிந்தார் அந்த மாதர்குல மாணிக்கம்.

எழு நூறு போலீஸ் வீரர்கள் தடியும் துப்பாக்கியும் தயாராக வைத்துக் கொண்டுள்ளனர்—ஆனால் செய்வது யாது என்று அறியாமல் திண்டாடித் தவிக்கின்றனர்; கட்டிடத்துக்கு வெளியே இருந்தபடி. உள்ளே இருந்தோ "ஐயயோ! அம்மம்மா! ஆபத்து! ஆபத்து! ஆண்டவனே! காப்பாற்று! ஓடிவாருங்கள். வாருங்கள் ஓடி!" என்ற கூக்குரல் பீறிட்டுக்கொண்டு வருகிறது. துப்பாக்கி வேட்டு கிளப்பி உள்ளே நுழையலாம்!! ஆனால், துப்பாக்கியால் சுட்டால், கொடுமைக்காரர் மீது குண்டு பாய்ந்திடாமல், ஆபத்தில் சிக்கிக்கிடப்போர் மீது வீழ்ந்தால், என்ன ஆவது என்ற அச்சம், போலீசாரைச் செயலற்றவர்களாக்கி விட்டது!

பள்ளிக்கூடக் கட்டிடம், தம்பி, உள்ளே தாளிடப்பட்டுக் கிடக்கிறது—ஆறு வயதிலிருந்து பத்து வயது வரையில் உள்ள சிறார்கள் சிறுமியர்கள் — அந்தச் சிட்டுகள் உள்ளே சிக்கிக்கொண்டன, சித்திரவதை செய்யப்போகிறோம், வெட்டிக் கண்ட துண்டமாக்கி வீசி எறியப்போகிறோம் என்று வெறியர் இருவர் கொக்கரிக்கின்றனர். எப்படியோ, பள்ளிக்கூடத்துக்கு உள்ளே நுழைந்துவிட்ட இரண்டு வெறியர்கள், பள்ளி மாணவர்களின் கைகாலைக் கட்டிப்போட்டு விட்டனர், ஆசிரியர்களையும் சிறைப்படுத்தி விட்டனர் — வெறியர் கரத்தில் கத்தியும் இருக்கிறது, துப்பாக்கியும் இருக்கிறது. எவ்வளவு பதைபதைத்திருக்க வேண்டும் அந்தப் பாலகர்கள்!!

ஆறு மணி நேரம், 92 குழந்தைகள், மூன்று ஆசிரியர்கள் இப்படிச் சிக்கிக் கொண்டனர்—இரண்டு வெறியர்கள் உள்ளே இருந்துகொண்டு கொக்கரிக்கிறார்கள

★ மூவர் முரசு ★

—மரியாதையாக நாங்கள் கேட்பதைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு, உங்கள் குலக்கொழுந்துகளை மீட்டுக்கொண்டு செல்லுங்கள்! தாக்கிட நுழைவீரேல், நாங்கள் பிடிபடுமுன்பு, குழந்தைகளை வெட்டிக் குவிப்போம்!! — என்கிறார்கள்.

அந்தக்கொடியவர்கள் கொண்டுவந்து கொடுக்கும்படி கேட்டது என்ன தெரியுமா, தம்பி, கேள், **18,24,000** ரூபாய் வேண்டும் என்கிறார்கள்!!

உள்ளே, துள்ளி விளையாடும் பிள்ளைப் பருவத்தினர்—அவர்களை உயிரோடு திருப்பப் பெறவேண்டுமானால், பதினெட்டு இலட்சரூபாய் தரவேண்டும் என்கிறார்கள்—கூறுபவர்கள்கரத்தில் கத்தி, துப்பாக்கி! வெளியே பல நூறு போலீஸ்!! வந்தது வரட்டும் என்று உள்ளே நுழையலாம், ஆனால், பாதகர்கள், மிரட்டுகிறபடியே, குழந்தைகளைக் கொன்றுவிட்டால்...?

அவ்வளவு வெறிபிடித்தவர்களா என்ற சந்தேகத்துக்கு இடமேயில்லை—ஏனெனில், குழந்தைகளைக் கட்டிப்போட்டுவிட்டு, கொண்டுவா, பணத்தை! — என்று கொக்கரிக்கும் இருவரும், பைத்யக்காரர்கள்! மிகப் பயங்கரமான போக்குடைய பித்தர்கள்! பித்தர்கள் விடுதியிலிருந்து தப்பி ஓடிவந்துவிட்டவர்கள்!

இப்போது, ஒருமுறை அந்தக் காட்சியை மனக்கண்ணாலே பார் தம்பி! உள்ளபடி, திடுக்கிடச் செய்கிறதல்லவா?

அப்படிப்பட்ட சமயத்திலேதான், அந்த ஆரணங்குக்கு எங்கிருந்தோ ஓர் வீர உணர்ச்சி பொங்கி எழுந்தது! குலக்கொடிகள், உயிரோவியங்கள், கட்டப்பட்டு, கண்ணீர் வடிக்கின்றன! கொஞ்சி விளையாடும் சிறுர்கள், சிறுமிகள்! கன்னக் குழியைக் காட்டி மகிழ்விக்கும் ஓர் சிட்டு, கண்ணில் குறும்பு காட்டி களிப்புறச் செய்யும் ஓர் மான், இசைபாடி இன்பமூட்டும் ஓர் குயில், களிநடம் காட்டி கவலையைப் போக்கிடும் ஓர் கலாபம், மழலையால் மன்துக்கு மதுரம் தரும் பருவத்தினர், தாய் உச்சிமோந்து முத்தமிட்டு பள்ளிக்கு அனுப்பிவைக்கும் பருவத்தினர்—பாதகர் இருவர், பயங்கரம் பேசுகின்றனர். அவர் தம் கரத்தில் கத்தியும் இருக்கிறது, புத்தியிலோ கோளாறு! எதையும் செய்வர்! எதற்கும் அஞ்சார்! பாதகம் இது, தீது, ஆகாது என்ற பாகுபாடு அறியா மனம்! எந்த நேரத்திலும், சுட்டுத் தள்ளிவிடக் கூடும், வெட்டிச் சாய்த்துவிடக் கூடும்!!

குழந்தைகளைப் பார்க்கப்பார்க்க, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்புகிறது! பயன்? எதையாவது செய்து, ஆபத்தைப் போக்கியாக வேண்டும். அதுவும் விரைவில்!

பூவை புலியானாள்! வெறியன் மீது பாய்ந்தாள்—அஞ்சாமையன்றி வேறோர் ஆயுதம் இல்லை! ஆனால் அஞ்சாமையைவிட ஆற்றலளிக்க வல்ல ஆயுதம்வேறென்ன உண்டு! பாய்ந்தாள்-பித்தன் கரத்திலிருந்த கத்தியைப் பறித்துக்கொண்டாள் அந்தக் கத்தியைக்கொண்டே அவன் மண்டைமீது தாக்கவே, மதி குழம்பிக்கிடந்த அந்த வெறியனின் மண்டை பிளந்தது, கீழே சாய்ந்தான்! வெற்றி—முதல் கட்டம்! கட்டிடக் கதவினைத் திறந்திட முடிந்தது. காரிகையைக் கொன்றுபோடக் கிளம்பினான் மற்றோர் பித்தன்! அவனைச் சுட்டுச் சாய்த்தது, உள்ளே நுழைந்த போலீஸ். குழந்தைகள் பிழைத்துக்கொண்டனர்! ஊரார் குதூகலமடைந்தனர்! இரு பித்தர்களில் ஒருவன் மருத்துவ மனையில் இறந்தொழிந்தான் — மற்றவன் கூண்டில் தள்ளப்பட்டுக்கிடக்கிறான்.

தெய்வமே! தெய்வமே! எங்கள் குடும்பத்துக்கு நீயே கண்கண்ட கடவுள்! — என்று பலரும் கண் கசியும் நிலையில் நின்று அன்பைக் காணிக்கையாக்கி அந்த ஆரணங்கின் காலடியில் கொட்டி இருப்பர். நமக்கே தோன்றுகிறதே, அந்த நல்ல பெண்மணியின் நாமத்தை வாழ்த்த வேண்டும் என்று. தம்பி! கார்ட்டோரி என்பது அந்தக்காரிகையின் பெயர். பித்தர் இருவரில், ஒருவன் பெயர் ஆர்ட்ரேர, மற்றவன் பெயர் ஆஸ்வால்டோ. பெயர், அந்த நாட்டுக்குத் தக்கபடி, மொழியின் தன்மைக்கேற்ப அமைந்திருக்கட்டும் — அந்த அணங்கு காட்டிய தீரத்துக்குத் தக்கவிதத்தில், பெயர் சூட்டி நாம் மகிழலாம், தம்பி, மறக்குடி மகள்!!

மகளிர் குலத்தின் மாண்பினை விளக்கிடும் நோக்குடன் யாரோ ஆசிரியர் ஆர்வத்துடன் கட்டினார் போலும் — வீரக்காதை தீட்டும் புலமை இதிலே விளக்கமாகத் தெரிகிறது என்று எண்ணிக் கொண்டுவிடாதே தம்பி, இது கதை அல்ல; உண்மை நிகழ்ச்சி—சென்ற திங்களில், இத்தாலி நாட்டில் டெராஜானோ, எனும் ஊரில் நடைபெற்றது.

இந்த வீரக்காதையை நான் படித்ததும், வியப்புற்றேன்—பலப் பல கருத்துக்கள் அலை முறையில் தோன்றிடலாயின!

கொடுமை இந்த அளவுக்கெல்லாம் செல்லுகிறதே என்று ஓர் எண்ணம் குடைந்தது — உலகு இன்றளவும் நாகரீகத்தைக் கடைப்பிடிக்கக்காணோமே என்ற கவலை மனதினை அரித்தது.

அந்த வனிதையின் வீரமே வீரம் என்ற எண்ணம் வந்தது—ஆம்! ஆம்! உலகு கெட்டுக் கிடப்பினும், நம்பிக்கைக்கு இன்னமும் இடமிருக்கிறது, இத்தகைய நாரீமணிகள் இருக்கத்தான் செய்கிறார்கள்—என்ற மகிழ்ச்சி மலர்ந்தது.

அந்த இரண்டு பித்தர்களை எண்ணிக்கொண்டேன் — கள்ளங்கபடமற்ற அந்தக் குழந்தைகளிடம் தமது கொடுவாளைக் காட்டி நின்றனரே!—என்பதை நினைத்தபோது நடுக்கமே எடுத்தது. இவர்களிடம் மனிதத்தன்மை மாண்டொழிந்தது ஏனோ என்று எண்ணினேன்—பித்தர்களன்றோ! அவர்கட்கு, தாம் எதுசெய்கிறோம், எதற்காகச் செய்கிறோம் என்று என்ன தெரியும்—குழம்பிய மனம்—என்பதை எண்ணினேன், ஓரளவு சாந்திபெற்றேன். அதிலிருந்து, தம்பி, என் மனம், நமது நாட்டு அரசியலுக்குத் தாவிற்று — என் மனக்கண்முன், மூன்று தலைவர்கள் போர்க்கோலம் பூண்டு மும்முரமாகப் பரணிபாடி பவனி வரும் காட்சி தெரியலாயிற்று.

(17-ம் பக்கம் பார்க்க)

# HOME LAND

அனுமதி கிடைத்துவிட்டது!

அன்பர்களின் ஆதரவு கிடைத்து வருகிறது!

ஆரம்ப வேலைகள் நடைபெறுகின்றன!

# HOME LAND

ஜனவரித் திங்களில் வெளிவருகிறது

நீண்ட காலத் தேவையை நிறைவேற்ற!

திராவிடத்துக்குப் பிற இடத்து தொடர்பு கிடைக்க!

பகுத்தறிவுத் துறைக்குப் பணியாற்ற பவனி வருகிறது

# HOME LAND

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உயிரோட்டம்

உலகு அறியவும்,

உலகின் பல்வேறு இடங்களிலே காணப்படும்

உயிரோட்டப் பிரச்சினைகளைத் திராவிடம் அறியவும்,

# HOME LAND

கிளேஸ் காகிதத்தில் டிம்மி 8 பக்க அளவில்

கட்டுரை, கவிதை, கதை, கடிதம், உரையாடல்

எனும் வண்ணங்களுடன் வெளிவரும்.

- ★ எண்ணம் வடிவெடுக்க
- ★ ஏட்டின் எழில் பூத்திட
- ★ ஆண்டுச் சந்தா ஏழு செலுத்தி ஆதரவுதாருங்கள்
- ★ விரைந்து செயலாற்றுங்கள்.

# HOME LAND


## இலக்கணம் கூறும், ஐயா!

காங்கிரஸ், தன் எதேச்சாதிகாரத்தைக் கண்டிக்கும் கட்சிகளை, இழித்தும் பழித்தும் பேசும் போக்கில், கடந்த பல ஆண்டுகளாக மெத்தவும் பயன்படுத்திவரும் ஒரு சொல், வகுப்புவாதக் கட்சி என்பதாகும்.

ஆட்சியின் போக்கிலே ஊழல் இருக்கிறது என்று கண்டறிந்து கண்டித்தாலும், திட்டத்திலே திறமையற்ற தன்மை இருப்பதைத் தெளிவுபடுத்தினாலும், சர்வாதிகாரப் போக்கு வளருவது கூடாது என்று எச்சரித்தாலும், சிறுபான்மையினர், பிற்படுத்தப்பட்ட மக்கள் ஆகியோர் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டினாலும், தாழ்த்தப்பட்ட மக்கள் தத்தளிக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டினாலும், எல்லாவற்றுக்கும் காங்கிரஸ் கட்சி அலட்சியமாக ஒரு பதிலை எடுத்து வீசும் — "செச்சே! இவை எல்லாம் வகுப்புவாதக் கட்சிகள்!" என்று.

காங்கிரஸ் கட்சி ஒன்றுதான் தேசத்துக்காக வாதாடும் கட்சி — தேசபக்தர் கட்சி—பிற யாவும் குறிப்பிட்ட வகுப்புகளுக்காக மட்டும் வாதாடும் அமைப்புகள், வகுப்புவாதக் கட்சிகள் என்று பொதுமக்கள் எண்ணிக் கொள்ள வேண்டும் என்பது காங்கிரஸ் தலைவர்களின் நோக்கம்.

வகுப்புவாதக் கட்சி என்று ஓயாமல் காங்கிரஸ் தூற்றி திரிவது திராவிட இயக்கத்தையும், முஸ்லீம் லீக்கையும் தான்!

ஏதோ வேண்டா வெறுப்புடன் ஓரோர் சமயம் இந்துமகா சபையையும், வகுப்புவாதக் கட்சி என்று கண்டிப்பது உண்டு.

வகுப்புவாதக் கட்சி என்றால் என்ன பொருள்? ஒரு கட்சி, வகுப்புவாதக் கட்சி என்று கூறப்பட, என்ன இலக்கணம் காட்டுவது?—என்று முஸ்லீம் லீகின் தலைவர் முகமது இசுமாயில், காங்கிரஸ் தலைவர்களைக் கேட்டிருக்கிறார்-இதுவரை காங்கிரஸ் இதற்குப் பதில் அளிக்கவில்லை.

சென்ற கிழமையும் லீக் தலைவர் திருச்சியில் பேசும்போது, வகுப்புவாதக்கட்சி என்று தூற்றித் திரிகிறீர்களே, வகுப்புவாதம் என்பதற்கு இலக்கணம் என்ன ஐயா, கூறுங்கள்! —என்று காங்கிரசைக் கேட்கிறார்.

அவர்களுக்கு இலக்கணம் என்ன தெரியும்! தூற்றுவர்!!

★

# 'தமிழ் நாடு'

புதிய மாநிலங்கள் ஏற்படும் இது சமயம் "தமிழ்நாடு" என்னும் பெயர் பற்றி எழுதவேண்டியது முக்கியமானது என்று கருதுகிறோம்.

தமிழ்நாட்டுடன் சேரவேண்டிய பகுதிகள் பல தமிழ்நாட்டுடன் சேராமல் போனதற்கும், சுமார் 10 இலட்சம் தமிழ் மக்கள் தங்கள் தாயகத்தில் (தமிழ்நாட்டின் எல்லை ஓரத்தில் வாழ்ந்தும்) வாழ முடியாமல் வேறு ராஜ்யங்களில் மரியாதையற்ற நிலையில்வாழவேண்டி ஏற்பட்டதற்கும், தமிழ் நாட்டில் சரியான கிளர்ச்சி இல்லாததுதான் காரணம் என்றாலும், முழு காரணம் இன்றைய ஆட்சியாளரேயாவர் என்பது நமது குற்றச்சாட்டு.

அதுமட்டுமல்ல, சென்னை ராஜ்யத்திற்கு "தமிழ் நாடு" என்று பெயரிட வேண்டுமென்று, எல்லா கட்சிகளும் ஏகோபித்துக் கேட்கும் அப்பெயர் கிடைக்காததற்குக் காரணம் சென்னை ராஜ்ய ஆட்சியாளரேயாவர். இவர்கள் மத்திய சர்க்காரிடம் சரியானபடி வற்புறுத்தியிருந்தால்தேவிகுளம் பீர்மேடு கண்டிப்பாகக் கிடைத்திருக்கும். "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றப்பட்டிருக்கும். செங்கோட்டையில் வேறு பாதி பறிபோயிருக்காது

ஆந்திரா பிரிந்த சமயத்திலேயே இந்திய பாராளுமன்றத்தில் சென்னை ராஜ்யத்திற்கு தமிழ்நாடு என்று பெயரிட வேண்டுமென்று திருக்குறளார் V. முனிசாமி அவர்கள் வற்புறுத்தி பேசினர். சென்னை சட்டசபையில் திராவிடப் பார்லிமெண்டரி கட்சித் தலைவர் திரு. S சுயம்பிரகாசம் அவர்கள் புதிய சென்னை ராஜ்யத்திற்கு தமிழ்நாடு என்று பெயரிடவேண்டுமென வற்புறுத்தி விவாதித்தார். திரு. ரெங்கசாமி ரெட்டியார் உட்பட எத்தனையோ பேர் அதை ஆதரித்துப் பேசியும் ஆட்சியாளர் ஆதரவில்லாததால் அத் தீர்மானம் தோற்றுவிட்டது.

விருதுநகர் வீரர், காங்கிரஸ் தியாகி, தமிழ்த்தாயின் தன்னலமற்ற புதல்வர் திரு. சங்கரலிங்க நாடார் "தமிழ் நாடு" என்று பெயர் வைக்கவேண்டும் என்று 77 நாள் உண்ணாவிரதம் இருந்து உயிரைக் கொடுத்துள்ளார். அவருடைய உயிரோடு காமராஜ் ஆட்சி விளையாடிக்கொண்டிருந்தது. தமிழ் நாட்டுத் தலைவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தார்கள்.

இதுதான் தமிழ்நாட்டின் கேவல நிலை. சென்னை ஆட்சி சங்கரலிங்க நாடாரின் அரிய உயிர்பலியாகப் பார்த்துக்கொண்டிருந்தது மிகமிக வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. வேறு மாகாணமாக இருந்திருந்தால் சங்கரலிங்க நாடார் உயிர் போனதுமே அரசாங்கம் கணநேரம் கூட நடைபெற்றிருக்க முடியாது. தியாகி சங்கரலிங்க நாடார் மறைவுக்கு வருந்துகிறோம். அவரது தியாகத்திற்கு சிரம் தாழ்ந்து வணங்குகிறோம். தமிழ் மக்கள் அனைவருக்கும் நமது ஆழ்ந்த அநுதாபம்.

சென்ற பார்லிமெண்ட் கூட்டத்தில் ராஜ்ய புனரமைப்பு மசோதா மீது தேவிகுளம், பீர்மேடு, நெய்யாட்டிங்கரை, செங்கோட்டை முழுதும் தமிழ்நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்றும், சென்னை ராஜ்யத்திற்கு "தமிழ்நாடு" என்று பெயரிடவேண்டுமென்றும் இதை எழுதுகின்ற தோழர் வீராசாமியும், தோழர் கே. அனந்தநம்பியாரும் திருத்தங்கள் கொடுத்துப் பேசினர் பெரம்பலூர்தொகுதி உறுப்பினர் வி. பூவராகசாமியும் வற்புறுத்திப் பேசினர். தமிழ்நாட்டு காங்கிரஸ்காரர்கள் வாய்மூடி மௌனம் சாதித்தார்கள். அதற்கு சென்னை ஆட்சியாளரின் கட்டளையாகத்தானே இருக்க வேண்டும்?

இன்றைக்கும் காலம் கடந்து விடவில்லை. புதிய, சென்னை ராஜ்யம் ஏற்பட்டு விட்டதால், அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் தாங்களே தீர்மானம் கொண்டு நிறைவேற்றி "தமிழ் நாடு" என்னும் பெயரை ஒத்துக்கொள்ளும்படு மத்திய சர்க்காரை சென்னை சர்க்கார் வற்புறுத்துமா?

—"தொண்டு"

## பெரும் புலவர் வேணுகோபாலருக்குப் பாராட்டு

பெரும் புலவர் மே. வீ. வேணுகோபாலனரின் 60-ம் ஆண்டு நிறைவையொட்டி 4-11-56-ல் காஞ்சிபுரத்தில் ஓர் பாராட்டு விழா நடைபெற்றது. விழாவுக்கு அண்ணமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. டி. எம். நாராயணசாமி அவர்கள் தலைமை தாங்க, விழாக் குழுத் தலைவர் திரு.வி.என். பெருமாள் (நகராட்சிமன்றத் தலைவர்) அவர்கள் காஞ்சி நகர மக்கள் சார்பில் ரூ. 5101 அடங்கிய பணமுடிப்பு வழங்க, திரு. பி. டி. இராஜன் அவர்கள் பொன்னுடை போர்த்த, கே. வெங்கடசாமி, எம். இராதாகிருஷ்ணனர், மயிலை சிவமுத்து, டாக்டர் தேவசேனபதி, சி. வி. திருவேங்கடம், க. வச்சிரவேலு, பாலூர் கண்ணப்பனர், சு. வை. துரைசாமி, பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார், ஆகியவர்கள் பாராட்டுரை, வழங்க, இசையரசு எம். எம். தண்டபாணி தேசிகரின் இன்னிசையுடன் விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. காஞ்சி பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. ந. சஞ்சீவி அவர்கள் அனைவருககும் நல்வரவு கூறினர். மணிவிழா மலரை திரு. அ. ச. ஞானசம்பந்தனர் வழங்கினர்.

# அப்போதே சொன்னேன்..!

அப்போதே நான் சொன்னேன்...! என்று கூறிக்கொள்வதிலே, ஒரு அலாதியான மகிழ்ச்சி பலருக்கும் உண்டு.

**எனக்கு முன்பே தெரியும்! நான் அப்போதே சொன்னேன்!** என்று கூறிக்கொள்வதில் குதூகலம் காண்போருடைய உள்ளம், வேறு ஒருவருக்கும் உண்மையை உணரும் திறம் கிடையாது, வேறு யாருக்கும் ஆராய்ந்தறிந்து இன்னின்னபடி இன்னின்னது நடக்கும் என்று கண்டறிந்துரைக்க முடியாது, அந்தத் தனிபட்ட திறமை தமக்கு உண்டு, தமக்கு மட்டுமே உண்டு, என்ற எண்ணம் குடிகொண்டது.

இந்தப் போக்கு, பலரிடத்திலும் இருப்பதற்குக் காரணம், இதனால் பிறர் தம்மை வியந்து பாராட்டுவது கேட்பதிலே ஏற்படும்மகிழ்ச்சியும், இவருக்குத் தெரிந்தது, மற்ற எவருக்கும் தெரியவில்லையே! என்று கூறும்போது ஏற்படும் பெருமை உணர்ச்சியுமேயாகும்.

அப்போதே சொன்னேன்— என்று, ஆரஞ்சுப் பழம் அழுகிவிடும், அந்தி சாய்ந்ததும் மழை வரும், ஆலமரத்தில் கிளிப்பொந்து இருக்கும, என்ற இப்படிப்பட்ட விஷயமாகச் சொல்பவருக்கும் மகிழ்ச்சிதான், அடால்ப் ஹிட்லர் தோற்றுவிடுவார், அமெரிக்கா அணுகுண்டு வீசும், சுகர்ணோ சைனு போவார், என்ற பெரிய விஷயமாகப் பேசுபவருக்கும் மகிழ்ச்சிதான் பிறக்கிறது.

புறப்படும்போதே சொன்னீர்கள் நான தான், கவனிக்காமல் கிளம்பினேன். வழியில் நீங்கள் சொன்னபடியே, மழை கொட்டு கொட்டு என்று கொட்டிற்று, 'தொப்பக் கட்டை'யாக நனைந்துபோனேன்— என்று ஒருவர் தம்மிடம் கூறும்போது, வெற்றிப் புன்னகையும் மேதாவிலாச ஒளியும் காட்டி, **எனக்குத்தான் தெரியுமே! நான்தான் அப்போதே சொன்னேனே!** மழை கட்டாயம் வரும் — நீ வீடுபோய்ச் சேருவதற்குள் மழை பலமாகும் என்று சொன்னேனே! — என்று கூறி, இனியாவது நான் வருமுன் கூறுவோன் என்பதை அறிந்துகொள் என்று எடுத்துக்காட்டும் முறையில் பேசி மகிழமுடிகிறதல்லவா!

ஒன்றிரண்டிலே இதுபோல, வெற்றி கிடைத்துவிட்டால் போதும், தேவையிருந்தாலும் இல்லாமற் போயினும், கேட்டு மதித்திட ஆட்கள் கிடைப்பினும் கிடைத்திடாவிட்டாலும், எப்போதும், எதுபற்றியும், இப்படித் **தான் நடக்கும்; எனக்குத் தெரியும்** — என்று சொல்லி வைப்பதிலே ஒரு சுறுசுறுப்பு ஏற்பட்டுவிடுகிறது.

அப்போதே சொன்னேன் — என்று அடுக்களை விஷயத்திலிருந்து அகில உலகப் பிரச்சினை வரையிலே போக்குக் கொள்வோர் பற்றி எண்ணிப் பார்த்தால், மிகமிக வேடிக்கையாக இருக்கும்.

அப்போதே சொன்னேன் — பயலை ஜாக்ரதையாகக் கவனித்து வா, ஒரு மாதிரியாக இருக்கிறான் என்று — அந்த அப்பாவி என் பேச்சைக் கேட்டானில்லை, இப்போது அவன் மகன், நான் சொன்னபடியே, யாரோ ஒரு பெண்ணை 'ரிஜிஸ்தர்' கலியாணம் செய்து கொண்டானாம்—இப்போது அந்த அப்பாவி வந்து சொல்லுகிறான், "ஐயா! நீங்கள் சொன்னபடியே நடந்துவிட்டது!" என்று; **எனக்குந்தான் தெரியுமே! நான்தான் அப்போதே சொன்னேனே!** என்று கிராமத்துப் பெரியவர் பேசிடக் கேட்கிறோம்.

ஒரு சமயம், அந்த வாலிபன் அதே நேரத்தில் தன் துணைவியிடம், "எனக்குத் தெரியும்—நான்தான் அப்போதே சொன்னேனே—என் அப்பா ஒரு கருநாடகப் பேர்வழி என்று—எனக்குத் தெரியும்—" என்றுபேசிக்கொண்டிருக்கக்கூடும்.

பெண்ணின் கன்னத்தைக் கிள்ளியபடி, அவள் தோழி "அப்போதே சொன்னேனல்லவா! ஆறுமுகம் அசகாய சூரன் — அப்பா எதிர்த்தாலும், ஊரே எதிர்த்தாலும், அவன் உன்னைத்தான் கலியாணம் செய்துகொள்வான் என்று சொன்னேனல்லவா! எனக்கு முன்பே தெரியும்!"—என்று சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கக் கூடும்.

அப்போதே சொன்னேன்! நெல் விலை ஏறப்போகுது — அவசரப்பட்டு விற்றுவிடாதே என்று — கேட்டானா? இப்போது கையைப் பிசைந்துகொள்கிறான் — என்று தரகுக் கடையில் நடமாடும் பேர்வழி சொல்கிறார்.

அப்போதே சொன்னேன்— ஆசாமியோட பளபளப்பும் மிடுக்கும் பார்த்தால் எனக்குச் சந்தேகமாக இருக்கிறது — இவனுக்குப் பணம் கிடைத்ததிலே ஏதோ சூட்சமம் இருக்கிறது என்று சொன்னேன்—இப்போது. அந்தப்பயல் திருட்டு நோட்டு போட்டான் என்று போலீசில் பிடித்துக்கொண்டார்கள் தெரியுமா, என்று, ஆளைக் கண்டதும் நோட்டம் பார்த்துக் கண்டறியும் நுண்ணறிவு தமக்கு இருப்பதாக எண்ணிக்கொள்பவர் கூறுகிறார். அதேபோது, திருட்டு நோட்டு போட்டதாகக் கைது செய்யப்பட்டவனுடைய நண்பன், எனக்கு முன்பே தெரியும்! அப்போதே சென்னேன்! வேண்டாமடா வெங்கிட்டு, போலீசைப் பகைத்துக்கொள்ளாதே, 'மொட்டைப் பெட்டிஷன்' எழுதாதே— ஏதாவது ஒரு பழி சுமத்தி உன்னைப் பிடித்துப் போட்டுவிடுவார்கள்—என்று சொன்னேன், கேட்கவில்லை, என்று கூறி வருத்தப்படுகிறான்.

எனக்கு முன்பேதெரியும்! அப்போதே சொன்னேன் — அடே அப்பா! வெங்கிட்டு! உனக்கு ஏழரை நாட்டான் இப்பத்தான் கடுமையான கட்டத்திலே இருக்கிறான், ஜாக்ரதை, ஜாக்ரதை, கண்டவனோடு சேர்ந்து சுற்றாதே என்று தலைப்பாடாக அடித்துக் கொண்டேன். கேட்கவில்லையே. போருதவனே! — என்று கூறி வெங்கிட்டுவின் தாயார் புலம்புகிறார்.

அப்போதே சொன்னேன், சார்! 66-கொண்டுவருகிற 'கேஸ்' எப்

போதும் இப்படித்தான். அடியும் இருக்காது, நுனியும் இருக்காது—என்று 66-மீது 62, 'இன்ஸ்பெக்டர் ஐயா'விடம் கூறிக்கொண்டிருக்கிருர். வெங்கிட்டுமீது குற்றம் ஏதும் ருஜு ஆகவில்லை — விடுதலை பெறுகிருன். உடனே அப்போதே சொன்னேன், என்ற, பேச்சு ஆரம்பமாகிவிடும்.

"அப்போதே சொன்னேன்—அகிலாண்டம்! ஆயாசப்படாதே! ஏதோ விஷக்கடி வேளை இது, உன்னுடைபுண்யம் வீண்போகாது, வெங்கிட்டுவுக்கு ஒரு கஷ்டமும் வராது" என்று மணியம் மந்திரமூர்த்தி சொல்லுகிருர்; சொல்லிவிட்டு, வேருேர் வீதியில் தர்மகர்த்தா தாத்தாச்சாரியாரைப் பார்க்கிருர்—பார்த்ததும், "நான் அப்போதே சொன்னேனே! பார்த்தீர்கள் அல்லவா. பயல் தப்பித்துக்கொண்டான். ஏகப்பட்ட செலவாம். பணம் பாதாளம்வரை பாயுமல்லவா! வெங்கிட்டு, திருட்டு நோட்டு போடவில்லை என்று கூறிவிட்டார்கள்" என்று பேசுகிருர். "அப்போதே சொன்னேன்—பார்த்தயா? ஏதாவது துளி ருஜு கிடைச்சுதா போலீசுக்கு......நம்ம வேலை அப்படி-தெரிகிறதா?" என்று வெங்கிட்டு வேருேர் இடத்தில், தன் கூட்டாளியிடம் இரகசியமாகப் பேசுகிருன்.

"அப்போதே சொன்னேன்—அவசரப்பட்டு அந்தப்பயலைப்பிடிக்கக் கூடாது — நமக்குக் கிடைக்க வேண்டிய ருஜு மறைந்துவிடும்—அவசரப்படாமல், செய்யவேண்டும் என்று சொன்னேன், கேட்கவில்லை என்று இன்ஸ்பெக்டருக்கு துப்பறியும் அதிகாரி அறிவுரை கூறுகிருர்.

இதுபோல, இந்த "அப்போதே சொன்னேன்" என்ற பேச்சு, எங்கு பார்த்தாலும், வகை வகையான போக்குடன் அடிபட்டுக்கொண்டே இருந்திடக் காண்கிருேம்.

அவ்வளவும், தாம் மேதாவிகள் என்பதைக் காட்டிக்கொள்வதிலே ஏற்படும், அற்பசந்தோஷம் காரணமாக ஏற்படுவதுதான்.

அப்போதே சொன்னேன் — என்ற பேச்சை நம்பிச் சில வேலைகளிலே ஏமாந்துவிடுபவர்கள் முகத்திலே அசடு வழியக் காணலாம்—என்னமோ அப்படி நினைத்தேன்—அதனுல் என்ன? நான் என்ன 'திரிகால ஞானி'யா? என்றெல்லாம் கேட்டுத் தமது கோபத்தைக் கொட்டுவார்கள்.

ஐயா! வெள்ளைக்காரன், அதிக நாளைக்குத் தாக்குப்பிடிக்க முடியாது. விட்டுவிட்டு ஓடவேண்டியதுதான். நாடு இருக்கிற கொதிப்பு சாமான்யமானதல்ல—இதைச் சதா சர்வகாலமும் அடக்குமுறையாலே ஒடுக்கிவைப்பதென்பது முடிகிற காரியமல்ல. சுயராஜ்யம் கட்டாயம் கிடைத்துவிடும்" என்று சொன்னது கேட்டு இடி இடியெனச் சிரித்துவிட்டு, வெள்ளைக்காரனுவது, இந்த நாட்டைவிட்டு ஓடுவதாவது! பீரங்கியும் வெடிகுண்டும் வைத்துக்கொண்டிருப்பவன் தக்ளிக்கும் ராட்டைக்கும் பயந்துகொண்டு நாட்டை விட்டு ஓடுவானுடா, பயலே! சொல்பவர் சொன்னுலும் கேட்பவருக்குப் புத்தி இருக்க வேண்டாமா! வெள்ளைக்காரனுவது வெளியே போய்விடுவதாவது" என்று அழுத்தந்திருத்தமாகப் பேசினுர் ஒருவர்; அரசியல் கொந்தளிப்பு நமக்குக் காட்டும் பாடத்தைக் கூறினேம், இந்த முதியவர் ஒரே அடியாக இப்படிப் பேசுகிருரே, ஒரு சமயம் இவர் கூறுவதுதான் உண்மையாக இருக்குமோ — அனுபவம் உள்ளவராச்சே — என்று அந்த இளைஞன் எண்ணிக்கொண்டான். சுயராஜ்யம் கிடைத்தது. சுயராஜ்யம் கிடைக்கவே கிடைக்காது என்று பேசின முதியவரைப்போய் பார்க்கவேண்டும், முகம் எப்படி இருக்கிறது என்று காணவேண்டும் என்று இளைஞன் வேகமாகச் சென்ருன். முதியவர் மற்ருெர் முதியவரிடம் பேசிக்கொண்டிருந்தார். சுயராஜ்யம் கிடைக்கவே கிடைக்காது என்று பேசிய அதே முதியவர், "அப்போதே சொன்னேனல்லவா! எனக்கு முன்பே தெரியும்! வெள்ளைக்காரப்பயல்கள் எப்படித் தாக்குப்பிடிக்க முடியும். அங்கே ஜெர்மனிக்காரன் உதைக்கிருன்—இன்னெரு பக்கம் ரஷியாக்காரன் மிரட்டுகிருன்—இங்கே நம்ம தேசம் சீறிப் போராடுது — எவ்வளவுதான் வெடிகுண்டு இருந்தாலும், இவ்வளவு விரோதத்தையும் சமாளித்துக்கொண்டு எப்படி வெள்ளைக்காரனுலே தப்பிப் பிழைச்சு, தர்பார் நடத்த முடியும்? அப்போதே சொன்னேனே, பார்த்தயா! வெள்ளைக்காரன், மூட்டை கட்டிவிட்டான்!" என்று வீராவேசமாகப் பேசிக்கொண்டிருக்கிருர்.

இளைஞன் திகைத்துப் போகாமல் என்ன செய்வது!

அப்போதே சொன்னேன் — என்ற மாமந்திரத்தை, பல்வேறு இடங்களில் பல்வேறு முறைகளிலே பயன்படுத்தி வைத்துவிட்டால், சொன்னதிலே ஏதாவது ஒன்று நடைபெற்றே தீரும் — உடனே, அப்போதே சொன்னேன்! என்று பிரதாபம் பேசலாம்!

சிலர், இதனைக் கலையைவிட நேர்த்தியானது ஆக்கிக்கொண்டு உள்ளனர். அவர்கள் அரசியலில் ஈடுபட்டு இந்த முறையைத் திறம்படப் பயன் படுத்தவும் செய்கிருர்கள். ஆகவே, இது நாம் அனைவரும் கடைக்கையாளவேண்டிய 'வித்தை' என்று 'சிபாரிசு' செய்வதாக யாரும் எண்ணிக்கொள்ள வேண்டாம்.

நம்மாலே 'ஜீரணிக்க' முடியாது—சிலருக்குக் 'கல் குடல்' என்பார்களே அதுபோல—எதையும் கூறி எப்படியும் வளைத்து எந்த விதத்திலும் 'வெற்றிக்கொடி' நாட்டியதாகக் கூறிக்கொள்ள முடியும்.

நமக்கு அது தேவையில்லை; ஆனுல் 'அப்போதே சொன்னேன்' என்ற பேச்சுக்காரரைக் காணும்போது வழுக்கு நிலத்தைக் கண்டால் எப்படிக் கவனிப்புடன் நடப்போமோ, அதுபோல் அவர்களிடம் நடந்துகொள்ளவேண்டும்.

'அப்போதே சொன்னேன்'—என்பதை, யாராரிடம் எப்படி எப்படிக் கூறி வைத்திருக்கிருர்களோ நமக்கென்ன தெரியும்.

வெங்கிட்டு, கதையைப் பார்த்தால், வேடிக்கை மட்டு மல்ல, அப்போதே சொன்னேன் என்ற போக்கிலே புதைந்து கிடக்கும் இலக்கணமும் புரியும்.

அதற்காகவே இது.

# கனலில் தங்கம்

## 8

களைத்துப் போய் வந்து நின்ற என்னைக் கண்டவுடன் அம்மா ஒன்றுமே பேசாது வாய் பிளந்தவாளாய்த் திகைத்து, நின்றுவிட்டார்கள். கையில் துணிமணி மூட்டையைச் சுமந்தவாறு எவ்வளவு நேரம்தான் நின்றிருப்பது? "ஏனம்மா அப்படிப் பார்க்கிருய்? தங்கம்தான் வந்திருக்கிறேன்" என்று சொல்லத் தோன்றியது. சாதாரண நிலையில் வந்திருந்தால் அப்படித்தான் சொல்லி இருப்பேன். அப்படிச் சொல்லும் நிலையிலா நான் இருந்தேன்? பஸ்ஸில் இருந்து இறங்கி வீடுவரை அழாமல் வந்ததே எனக்குப் பெரிய முயற்சியாகப் போயிற்று. வீட்டுக்குள் அடியெடுத்து வைத்ததும் நெஞ்சம் குமுறியது. பெற்ற அன்னையைக் கண்டதும் எவ்வளவோ முயன்று முயன்று அழுகையை அடக்கிக்கொண்டிருந்தேன். என்ருலும் கண்களில் நீர் தேங்கிக் கலங்கிக்கொண்டிருந்தது.

"எப்போது அம்மா வந்தாய்? அவர் எங்கே?" என்று ஏதாவது அம்மா கேட்டிருந்தாலும் ஆறுதல் பெற்றிருப்பேன். ஆனுல் என்னைக் கண்டவுடன் திகைத்து நின்றுவிட்டதைப் பார்த்ததும் அடைத்து நின்ற துக்கம், அணை உடைத்துக் கிளம்பிய வெள்ளமாயிற்று. ஓடிச் சென்று தாயின் மார்பில் என் முகத்தைப் புதைத்துக்கொண்டு கேவிக் கேவி அழுதேன். "என்னம்மா? என்னம்மா? சொல்லு" என்று கேட்ட வண்ணம அம்மா என்னைத் தேற்ற முயன்ருள். நினைக்க நினைக்கப் புது வலிவுடன் என் துன்பம் நினைவுக்கு வந்துகொண்டு இருந்தது.

எவ்வாருே அழுகையும் விக்கலுமாக அம்மாவிடம் சொல்லிவிட்டேன். "என்னைப் போகச் சொல்லிவிட்டார்கள். நான் அங்கே இருக்கக்கூடாது என்ருர்கள். இனி வந்தால் தொலைத்துவிடுவேன் என்கிருர்கள்" என்று கொஞ்சங் கொஞ்சமாகச் சொன்னபோது பெற்ற வயிறு பற்றி எரிந்ததுபோல் அம்மா துடித்துப் போனுள். "மகளே மகளே" என்று ஓலமிட்டாள். "யாருக்கு என்ன செய்தோம்?" "பாவிகள் அப்படியா செய்துவிட்டார்கள்" என்று புலம்பினுள்.

அக்கம்பக்கத்தார் கூடிவிடப் போகிருர்கள் என்று காரணம் சொல்லி மெல்ல அம்மாவை அமைதி அடையச் செய்வது பெரும்பாடாய் முடிந்தது.

அப்பா வந்த உடன் இத்த நாடகம் மீண்டும் ஒருமுறை நடந்து ஓய்ந்தது. அம்மாவைப்போல் அப்பா செயலறியாது திகைக்கவில்லை. "என்னம்மா காரணம்? சொல்" என்றே மீண்டும் மீண்டும் கேட்டார். நான் என்னவென்று சொல்வது? எதைச் சொல்வது?

**மா. கி. தசரதன்**

"என் மனமே சரியில்லை அப்பா பிறகு சொல்கிறேன்" என்று சொன்னேன்.

"என்னமோ போம்மா, சொன்னுல் தானே தெரியும்" என்று சலித்துக் கொண்டார்.

"பிறகு சொல்கிறேனப்பா" என்று சொல்லி எழுந்து தோட்டத்துப் பக்கம் போனேன்.

ஏதும் அறியாச் சிறுமியாய் நான் ஆடிப்பாடி ஓடித் திரிந்த இடங்களை எல்லாம் கண்டதும் இளமை நினைவுகள் துளிர்விட்டன. இளந் தோழியருடன் மணலில் குச்சி மறைத்து ஆடிய ஆட்டங்களையும், காலால் கோடுகள் கிழித்து உடைந்த ஓட்டுத் துண்டுகளை வீசி எறிந்து ஆடிய ஆட்டங்களையும் முடமானதுபோல ஒரு காலை மடித்துக்கொண்டு ஒற்றைக் காலில் ஓடி ஓடி மற்றவர்களைப் பிடிக்க முயன்றதும், கண்ணைக் கட்டிக் கொண்டு தோட்டமெலாம் தோழிகளைத் தேடித் திரிந்ததும் நினைவிற்கு வந்தன.

நேற்று நடந்ததுபோல் தோன்றின அந்த நிகழ்ச்சிகள். ஆனுல் எவ்வளவோ ஆண்டுகள் ஆகிவிட்டன. மீண்டும் அந்த இன்பம் கிடைக்குமா, என்று ஏங்கியது என் நெஞ்சம். அப்படி நினைத்ததும் என்னையறியாது சிரித்தேன். என் வயிற்றிலே வளரும் கரு, நான் ஆடித்திரியும் சிறுமியன்று என்று உணர்த்தி நிற்கின்றது. எங்கிருந்து அந்த இன்பத்தைப் பெறுவது? இந்தக் கருவளர்ந்து வெளிப்பட்டு விளையாடும்போதுதான் கண்டு இன்பம் அடையமுடியும் என்று எண்ணியதும் மகிழ்ச்சி பிறப்பதற்கு மாருகத் துன்பமே பிறந்தது.

இந்த உயிர் என்றுமே இவ்வூர் மண்ணிலேயே விளையாட வேண்டியது தானே. கணவர் என்னைப் புறக்கணித்து ஒதுக்கிவிட்டதுபோலத் தானே எனறு எண்ணி வருந்தினேன்.

நான் எவ்வளவோ மன்ருடினேன். எவளைக்கண்டாலே அருவருப்புக் கொண்டேனே, அவள் கால்களில் வீழ்ந்து வணங்கினேன். கணவரின் தாள்களின் தயவை எதிர்பார்த்தேன். ஓரகத்தியின் கணவர் கூட வழக்கமாக மோன நிலைவிட்டு எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். ஆனுல் எல்லா முயற்சியும் வீணுயின. வேண்டுகோள் வெற்றுரைகள் ஆயின. புலம்பல் பொருளற்றுப் போயிற்று.

மணவறையில் மகிழ்ச்சி வெள்ளம் தந்தவை என எந்தக் கைகளை நினைந்து வந்தேனே, அந்தக் கைகளே என் கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளின. "போடி போ, எக்கேடாவது கெட்டுத்தொலை" என்ற கொடுஞ்சொற்களைப் பொழிந்த வாய்தான் முன்னம் ஒருநாள் அமுதம் அள்ளித் தந்தன என்று எண்ணியபோது வருந்தினேன். அத்தனைக்கும் நான் ஒன்றும் பெரிய குற்றம் செய்துவிடவில்லை. பெரிய குற்றம் என்ன, நான் செய்ததையும் நடந்துகொண்டதையும் குற்றம் என்றே சொல்ல இயலாதே. அதற்கே எனக்கு இந்தத் தண்டனை. ஆனுல்......நினைக்கவே நெஞ்சம் குமுறுகின்றது.

இடையில் சில நாட்கள் மட்டுமே ஓரகத்தியும் பொன்னுச்சாமியும் பழக்கத்தைக் குறைத்துக்கொண்டது போல் காணப்பட்டனர். நள்ளிரவில் கணவர் வந்து, கூடத்தில் உறங்கிக் கொண்டிருந்த ஓரகத்தியிடம் "பொன்னுச்சாமி—சேர்க்காதே" என்று சினந்து சொன்ன சில நாட்கள்வரைதான் அவள் அப்படி நடந்துகொண்டாள். பிறகு மெல்ல மெல்ல அவர்கள் பழக்கம் பழைமை போல் வளர்ந்துவிட்டது. ஆனால் ஒரே ஒரு வேறுபாடு. முன்பெல்லாம் அவன் எப்போது வேண்டுமானாலும் வந்துகொண்டிருந்தவன், அதற்குப் பிறகு என் கணவர் இல்லாத நேரங்களில் வரத் தலைப்பட்டான்.

ஓரகத்தியின் தீச்செயல்கள் வரவர எல்லை மீறிப்போய்க்கொண்டிருந்தன. பொன்னுச்சாமி அடிக்கடி வீட்டுக்கு வரத் தொடங்கினான். வந்தபோதெல்லாம் மணிக்கணக்காக ஓரகத்தியுடன் பேசிக்கொண்டிருந்தான். இடை இடையே கடுவன் பூனைபோல் என்னையும் உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் வருவதோ ஓரகத்தியுடன் பேசுவதோ எப்போதோ ஒரு முறை காணும் போதும் கணவர்க்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை என்பது அவர் முகக் குறிப்பில் தெளிவாகத் தெரிந்தது. ஆனால் ஓரகத்தி அதைப்பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. ஓரகத்தியின் கணவரோ ஏதும் செய்ய இயலாத கோழை போல் தலை குனிந்து வீட்டுக்குள் வருவதும் உண்ணுவதும் மீண்டும் தலை குனிந்தபடியே வயலுக்குப் போவதுமாக இருந்தார். அவரிடம் முதலில் எனக்கு இருந்த இரக்க உணர்ச்சி படிப்படியாக மாறி வெறுப்பாகியது. அவரைக் கண்டபோதெல்லாம் என் உள்ளம் கோபம் கொண்டு கொதித்துக் குமுறும். அந்த வீட்டில் நானும் அவர்மீது வெறுப்புற்று ஒதுக்கிவிட்டால் அவரைக் கவனிப்பவர் யாருமே இல்லையே என்று எண்ணியதும் வெறுப்பு ஓடி ஒளிந்து விடும். மீண்டும் இரக்க உணர்ச்சி தலை எடுக்கும்.

நிலைமை இப்படியே போய்க்கொண்டிருந்தால், குடும்பம் என்னாவது என்று எண்ணியபோதெல்லாம் உள்ளம் நொந்தேன். திருத்த வழியே கிடையாதா என்று எண்ணி வருந்தினேன். குடும்பத்துப் பெரியவர்கள் யாராவது இருந்தால் அவர்கள் சொல்லித் திருத்தலாம். ஆனால் அந்த வீட்டிலோ இருந்த பெரியவர் இரங்கத்தக்கவராக இருந்தார். இனி நாம்தான் ஏதாவது வழி காண வேண்டும். அஞ்சி அஞ்சி அடங்கிக் கிடப்பது ஆகாது என்று துணிந்துவிட்டேன். வருவது வரட்டும்; துணிந்து கடமை செய்வோம் என உறுதி கொண்டேன். கண்டாலே வெறுப்பூட்டும் கயவனை பொன்னுச்சாமி இனி இந்த வீட்டுப்பக்கம் வராமல் செய்ய வழி கிடைக்காதா என்று என் மனம் ஏங்கியது.

ஓரகத்தியின் உடல் நாளுக்குநாள் மெலிந்து வந்தது. இரவில், அன்று ஒருநாள் தொடங்கிய இருமல் நாள்தோறும் மிகுதியாகிக்கொண்டிருந்தது. ஆனால் அவள் அதைப்பற்றிக் கவலைப்படாதவளாகி சிரிப்பும் பேச்சுமாகவே நாட்களைக் கழித்துக்கொண்டிருந்தாள். அவள் உடலில் முன்பு போல் வலிவு இன்மையால் பலவேளைகளில் என் கணவர் உண்ணவந்த போதெல்லாம் உணவு படைக்கும் பணி எனக்குக் கிடைத்தது. கசப்பின் இடையில் துளி தேன் பெய்ததுபோல் எனக்கு அது எவ்வளவோ இன்பமாக இருந்தது.

என் உடலில் மற்றோர் உயிரும் ஒட்டி வளர்ந்து வந்தமையால், முன் போல என்னாலும் வேலை செய்ய இயலாதிருந்தது. இருப்பினும் முயன்று எல்லா வேலைகளையும் முடித்து வந்தேன்.

இனி வேலைகளுடன் வேலையாக குடும்பத்தை ஒழுங்குபடுத்தும் பணியிலும் ஈடுபடவேண்டும். அதனால் வருவது வரட்டும் என உறுதிகொண்டேன். துணிந்து செயலில் இறங்கினால்தான் வெற்றியோ தோல்வியோ இரண்டில் ஒன்றைக் காண இயலும். அஞ்சி அஞ்சி அடங்கிக் கிடக்கக் கிடக்கத் தீமைகள் மலிந்து விடுகின்றன. நமக்கென்ன என்று எண்ணிடும் போக்கும் பயன் தரவில்லை. நான் ஒருத்தி இருக்கிறேன் எதிர்ப்பதற்கு என்ற நிலை தோன்றினால்தான் கொஞ்சம் அடங்கி நிலைக்கு வருவார்கள் என்று துணிந்துவிட்டேன்.

அந்தத் துணிவுதான் அன்று நான் அவ்வாறு நடந்துகொண்டதற்குக் காரணம். வழக்கம் போல் பொன்னுச்சாமி பிற்பகல் வீட்டுக்குவந்தான். அவன் வரும்போது ஓரகத்தி தோட்டத்தில் இருந்தாள். இதற்கு முன்னும் இவ்வாறு சில முறை அவன் வரும்போது அவள் தோட்டத்தில் இருந்திருக்கின்றாள். அப்போதெல்லாம் நான் சமையல் அறையிலேயே பதுங்கிக் கிடப்பேன். ஓரகத்தி வரும் வரை அவனும் காத்துக்கிடப்பான். அன்று துணிந்துவிட்ட மனத்தினளாக நானே கூடத்திற்குச் சென்று, "அக்கா இல்லை-வெளியில் போயிருக்கிறார்கள்" என்றேன். "சரி நான் போய்வருகிறேன்" என்று சொல்லிப் போய்விடமாட்டானா என்று எண்ணி அவ்வாறு சொன்னேன். ஆனால் அவனோ "இருக்கட்டும் இருக்கட்டும்" என்று சொல்லிவிட்டு அங்கேயே உட்கார்ந்துவிட்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் ஓரகத்தியும் வந்தாள். பொன்னுச்சாமியும் அவளும் என்னென்னவோ பேசினார்கள். போகின்றபோது அந்தக் கொடியவன்,

"தெரியுமா அத்தை சேதி-இன்று உங்கள் தங்கம் என்னுடன் பேசினாளே—ஆமாம். நீ வெளியேபோய் இருக்கிறாய் என்றாள்" என்றான்.

"அப்படியா?" என்று ஒரே சொல்லில் அதற்கு விடையைச் சொல்லிவிட்டு எழுந்துவிட்டாள் ஓரகத்தி.

மாலை என் கணவர் வீடு திரும்பியதும் "வெளி மனிதர்களுடன் இவளுக்கு என்ன பேச்சு வேண்டி இருக்கின்றது. பொன்னுச்சாமியுடன் நான் இல்லாதபோது இவள் பேசினாளாம்" என்று ஓரகத்தி அவரிடம் கூறினாள்.

"எல்லாம் நீ செய்கிற தவறுதான். நீ ஏன் அவனை அடிக்கடி வரச் சொல்லுகின்றாய்?" என்றார் கணவர்.

"அதற்காக? அவள் பேசுவதா என்ன! இதெல்லாம் கொஞ்சம் கண்டித்து வைக்க வேண்டும். நானே சொல்வேன். ஓரகத்தியின் கொடுமை என்பார்களே என்றுதான் விட்டுவிட்டேன்" என்றாள்.

"சரி கேட்கின்றேன்" என்றார் அவர். அதைப்பற்றிக் கேட்பார் என எதிர்பார்த்துக்கொண்டே இருந்தேன் ஆனால் அவரோ ஏதும் கேட்கவே இல்லை.

மறுநாள் பொன்னுச்சாமி வரவே இல்லை. ஆனால் யாரோ வேறு ஒருவன் வந்து ஓரகத்தியிடம் ஏதோ காகிதம் கொடுத்துவிட்டுப்போனான். அதைப் பெற்றுக்கொண்டு ஓரகத்தி உள்ளறைக்குச் சென்றாள். வெளியில் வந்தபோது, யாருக்கும் தெரியாமல் தின்பண்டத்தைத் திருடித் தின்றுவிட்டு மகிழ்ச்சியை அடக்கிக்கொண்டு கலவரத்துடன் வெளியே வரும் கரவுடைய சிறுமியின் முகத்தில் தோன்றும் குறிகள் அவள் முகத்தில் காணப்பட்டன.

மறுநாள் காலை முதலே ஓரகத்தி பரபரப்புடன் காணப்பட்டாள். வேலையின்றி இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தாள். அடிக்கடி உடைப்

பெட்டியைத் திறப்பதும் சில புடவைகளை எடுத்துப் பார்த்துப் பிறகு வைத்து மூடுவதுமாக இருந்தாள். பெட்டியில் இருந்த நகைகளை எடுத்துப் பார்த்தாள், பிறகு இருந்த இடத்தில் வைத்தாள். நொடிக்கு ஒருமுறை தெருவாயிலில் நின்று எட்டி எட்டிப் பார்த்தாள். அவள் கணவர் தாலுக்காக்கச்சேரியில்ஏதோ புதிதாக எருவாங்கத் தரும் கடனுக்காக விவரம் கேட்கப் போயிருந்தார். என் கணவரும் வெளியிலே சென்றிருந்தார்.

யாரோ ஒருவன் கொடுத்த காகிதம் என்னவாக இருக்கும் என குழம்பிக்கொண்டிருந்தேன். அந்தக் கடிதம்தான் அவள் மகிழ்ச்சிக்குக் காரணமாக இருக்கும் என்பதும் கொஞ்சம் புலனாகியது.

அந்தக் காகிதத்தைப்பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்த எனக்கு குளிக்கும் அறையில் ஓரகத்தி அவிழ்த்துப் போட்டு வந்த அழுக்குப் புடவையின முன்தானையில் முடிச்சைக் கண்டதும் மகிழ்ச்சி பிறந்தது. அந்த முடிச்சை அவிழ்த்துப் பார்த்தேன்.

அந்தக் காகிதம் ஒரு கடிதம். கள்ளப் பொன்னுச்சாமிதான் அதனை எழுதி இருந்தான்.

அன்பே,

நாளை பொறுத்து மறு நாள் இரவு 12-மணிக்குத் தோட்டத்து எலுமிச்சை மரத்தடிக்கு வா, கார் கொண்டுவருகிறேன் சென்னைக்குப் போய்விடுவோம். இந்த நாட்டுப்புறத்தில் கிடந்து உழல வேண்டாம். நான் அங்கு வந்தால் ஒருவேளை இதைச் சொல்ல முடியாதோ என்றுதான் கடிதம் அனுப்புகிறேன். விழிப்பாக இரு, ஐயம் ஏற்படாதபடி நடந்துகொள், கட்டாயம் வருவேன்.

அன்பன்,
பொன்னுசாமி.

என்று இருந்தது அது. அதைப் படிக்கவே என் உள்ளம் கூசியது; என்றாலும் என்னதான் இருக்கிறது என்று அறியும் வேட்கையில் முடித்துவிட்டேன். முடித்ததும், "ஐயோ பாவி, உன்கெதி இதுவோ" என நொந்துகொண்டேன். என்ன ஆயினும் சரி இன்று இதை எப்படியும் கணவரிடம் காட்டிவிட வேண்டும் என்றுதீர்மானித்தேன். முடியுமானால் தடுத்துப் பார்ப்போம், பிறகும் அவள் கெட்டால் கெட்டுப்போகட்டும் என்று எண்ணி அந்தக் கடிதத்தை ஒளித்து வைத்தேன்.

நான் குளித்துவிட்டு வந்ததும் ஓரகத்தி தடதட என குளிக்கும் அறைக்குள் ஓடினாள். சற்று நேரத்துக்கெல்லாம் வாடிய முகத்தினளாகத் திரும்பி வந்தாள். அந்தக் கடிதத்தைத்தான் தேடி ஏமாந்திருக்க வேண்டும் என்று உணர்ந்தேன்.

என்றைக்கும் இல்லாததிருநாளாக என்னை நெருங்கி வந்து உட்கார்ந்தாள் "தங்கம் நீ எடுத்தாயா அதை?" எனக் குழைந்து கேட்டாள் என்னை. அந்தக் குழைவைக் கண்டு அவளிடம் எனக்கு அநுதாபம் உண்டாயிற்று. ஒருகணம் கொடுத்து விடலாமா என்று என்று எண்ணினேன். ஆனாலும் மனதை உறுதிப்படுத்திக்கொண்டேன். இவளுக்குத் தக்க பாடம் கற்றுத்தர எண்ணினேன், அதனால்.

"எதை அக்கா?" என்றேன்.

"என் முன்தானையில் இருந்ததே"

"என்ன இருந்தது?"

"ஒரு காகிதம், என்னுடையது அல்ல. கோடிவீட்டுக்காரியினது. நீ கண்டாயா. கொடுத்துவிடு தங்கம்"

"இல்லையே அக்கா. நான் ஒன்றையும் பார்க்கவே இல்லையே"

"தங்கம்—கொடு தங்கம் என்னைத் துடிக்கச் செய்யாதே கொடு"

"இல்லை அக்கா எனக்கென்ன தெரியும். என்னிடம் ஏது?" என்று கடைசிவரை பிடிவாதத்துடனேயே இருந்தேன்.

"கொடுக்காமல்போனால் போயேன் எனக்கென்ன. அவள் கேட்டால் எங்கோயோ விழுந்துவிட்டதடி அம்மா" என்று சொல்விட்டுப் போகிறேன் என்று சொல்லிவிட்டு அவள் உள் அறைக்குப் போய்விட்டாள். அவள் கண்கள் பகை உமிழ்ந்தன.

மாலையில் என் கணவர் வந்தார். இனி அதைப்பற்றிப் பேசித் தீர்த்துவிட வேண்டியதுதான் என்று எண்ணிக் கண்டெடுத்த கடிதத்துடன் தொழுவத்தில் மாட்டுக்கு வைக்கோல் அள்ளித் தெளித்துக்கொண்டிருந்தவரிடம் சென்று "இதோ பாருங்கள். அந்தப் பொன்னுச்சாமியின் ஆள் இதைக் கொண்டுவந்து உங்கள் அண்ணியிடம் கொடுத்துவிட்டுப் போனான்" என்று நீட்டினேன்.

(தொடரும்)

# எஸ். எஸ். சோணவதி

இரங்கூன்—சென்னை கப்பல் போக்குவரத்து மீண்டும் எஸ். எஸ். "சோணவதி"யின் துணைகொண்டு ஆரம்பமாகியது. போக்குவரத்துக்குத் தகுதியற்றதெனப் பலமுறை தெரிவித்திருந்தும் பலனில்லை. பல நாடுகளுக்கு கோடிக்கணக்கில் கடன் தந்துதவ முன்வரும் இந்திய அரசாங்கம் சென்னை—இரங்கூன் கப்பல்பிரச்னையில் போதிய கவனம் செலுத்தவில்லை என்பது வருந்தத் தக்கது. அன்று சென்ற "சோணவதி" பயங்கரத்தையும், பீதியையும் விளைவித்ததாகச் செய்திகள் கூறுகின்றன. பிரயாணிகள் அடைந்த அல்லல்கள் கணக்கில. "சோணவதி"யில் பிரயாணம் செய்வோர் சுகமே போய்ச் சேருவது பற்றி உறுதி ஏதும் இல்லா நிலையிலே, உயிரைத் துச்சமாக மதித்து தாயகம் ஏகும் தன்மையிலே தமிழ் மக்கள் காணப்படுகிறார்கள். இது ஓர் வெட்கக்கேடான செய்தியாகும். இரங்கூன்—கல்கத்தா கப்பல் போக்குவரத்தில் இத்தகைய அவல நிலை ஏற்பட்டிருப்பின் கல்கத்தாவில் கண்டன ஊர்வலம் புறப்பட்டிருக்கும். அது அவர்களது உணர்ச்சி வடிவம். நமக்குத்தான் அந்த உணர்ச்சி இல்லையே!

கடல்கடந்த தமிழர்களைப் பற்றி தாயகத்து தமிழர்களும், தமிழர் தலைவர்களும் சிந்தித்தால் நமக்கேன் இந்தக் கதி? அவர்கட்கு எங்கே நேரமிருக்கப் போகிறது! கட்சிப் பிரச்சாரத்திற்கே நேரம் போதவில்லையே!

இங்குள்ள கப்பல் பிரயாணிகள்முன்னேற்ற சங்கத்தாராவது ஏதாவது முயன்றார்களாவெனில் 'கிடையாது' என்றுதான் பதிலைத் தரவேண்டிய துர்பாக்கிய நிலையிலுள்ளோம். சோணவதி பிரயாணிகள் தப்பிப் பிழைத்தார்களென்ற செய்தி வெளிவந்தும்கூட டை சங்கம் மௌனம் சாதிப்பது வேதனையைத் தருகிறது.

அ. ப. இ. காங்கிரஸ், அ. ப. த. சங்கம் முதலியவற்றின் நடவடிக்கைகளைப்பற்றி போகப்போகத் தெரியும்.

—'தந்தி' ரங்கூன்.

*

# இருளில் இன்பம்!

உலகத்தில் மற்ற நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இந்திய துணைக்கண்டத்தில் கல்வியறிவு மிகமிக மோசமான நிலையில் இருக்கிறது. மேலை நாடுகளில் மக்கள் தொகையில் 100க்கு 90, 95, என்று கல்வியறிவு பெற்றோர் தொகை உயர்ந்திருக்கும்பொழுது, இந்தப் 'பாரதப் புண்ணிய' பூமியில் மட்டும் 100க்கு 14க்கு மேல் கல்வியறிவு பெற்றோர் கிடையாது. இந்த 100க்கு 14 என்ற கணக்குக் கூட சரியானதல்ல, கையெழுத்து மட்டும் போடத் தெரிந்தால்கூட சென்சஸ் ஏட்டில் அவன் கல்வியறிவு பெற்றவனாக ஏற்றுக்கொள்ளப் படுகிறான்!

சுதந்தரப்போராட்டக்காலத்தில் "வெள்ளையரின் சூழ்ச்சியால், இந்தியாவில் கல்வியறிவு பரவாமலிருக்கிறது. விடுதலை பெற்ற இந்தியாவில் கல்வி வளர்ச்சி அபரிதமாகக் காணப்படும்" என்று தேசியத் தலைவர்கள் ஆர்வத்துடன் பேசினார்கள். விடுதலை பெற்று ஒன்பது ஆண்டுகளாகியும், கல்வித் துறையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி எதுவும் காண்பிக்கப்படவில்லை. அதற்கு மாறாக காங்கிரசுக்காரர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்ததும், கல்வி வளர்ச்சி தடைப்படும் விதத்தில் திட்டங்கள் தீட்டப்படுகின்றன; கல்வி வளர்ச்சியால் ஏற்பட்டிருக்கிற — ஏற்படக்கூடிய கேடுகளைப் பற்றிப் பொறுப்பு வாய்ந்த தலைவர்களே பேசவும் தலைப்பட்டுள்ளனர்.

வேறு எந்தத் துறையில் மாறுதல் செய்யத் தெரியவில்லை யென்றாலும், கல்வித்துறையில் மட்டும் ஆண்டுக்கொரு மாறுதல் செய்த வண்ணம் அரசாங்கத்தினர் இருக்கின்றனர். வர்த்தக மந்திரி, வர்த்தகத் துறையில் புதிய முறையைக் கொண்டுவரத் தயங்குவார்; விவசாய மந்திரி, விவசாயத் துறையில் மாறுதல் செய்யுமுன் நிபுணர்களைக் கூப்பிட்டு ஆலோசனைகள் கேட்பார்; ஆனால் கல்வி மந்திரி மட்டும் தனக்குத் தோன்றியதை உடனே புதிய திட்டமாக்கி அமுலுக்குக் கொண்டுவரத் தயங்குவதில்லை. தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்ற வகையில் ஆட்சிப் பீடத்தில் அமர—ஒட்டிக் கொள்ள வாய்ப்புக் கிடைத்த ஒவ்வொருவரும், உடனே கல்வித் துறையில் தம்மை ஒரு மாபெரும் நிபுணரென எண்ணிக்கொண்டு, தாறுமாறான திட்டங்களைத் தீட்டி எதேச்சாதிகார முறையில் அமுலாக்கத் தலைப்பட்டுவிடுகின்றனர். புதிய திட்டங்களில் இருக்கும் குறைபாடுகளை எடுத்துச் சொன்னால், ஆட்சியாளர்கள் அவற்றைக் கேட்டுக்கொள்வதில்லை. ஆட்சிப் பீடத்திலிருப்பவர்கள் புதிய கல்வித் திட்டங்களைக் கொண்டுவந்த சமயங்களிலெல்லாம், பல்கலைக் கழகத்தினர், கல்வித் துறையில் காலமெல்லாம் செலவழிந்த நிபுணர்கள் திருத்தங்கள் கொடுத்தார்கள், ஆனால் ஆட்சியாளர் ஆணவத்துடன் தமது திட்டங்களை நிறைவேற்றுவதில் முனைப்பாக இருந்தார்களேயன்றி, பல்கலைக் கழகத் தலைவர்களுக்கோ, கல்வி நிபுணர்களுக்கோ மதிப்பு அளித்துத் திட்டங்களைத் தீட்டவில்லை. ஆச்சாரியார் முதலமைச்சராயிருந்தகாலத்தில் அத்தகைய நிலை ஏற்பட்டது. சரியான திட்டங்கள் போடத் தெரிவதில்லை. போட்ட திட்டத்திலுள்ள குறைபாடுகளை நீக்கவும் ஒப்புக்கொள்வதில்லை. ஆளவந்தாரின் ஆணவப் போக்கால், அவசர முடிவுகளால் ஆண்டுக்கொரு கல்வித்திட்டம் நாட்டுக்குத் தரப்படுகிறது. இப்பொழுதுள்ள கல்வி முறையை மாற்றியமைத்து, "புதிய கல்வி முறை" கொண்டுவர வேண்டுமென்று சொல்லாத தேசியத் தலைவர்கள் கிடையாது. எனலாம்.

இப்பொழுதுள்ள கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று அடிக்கடி கூறுகிறார்களே, அவ்வாறு மாற்றவேண்டிய அவசியத்துக்கான காரணங்கள் என்ன தருகிறார்களென்று பார்த்தால், இரண்டு முக்கிய காரணங்கள் தரப்படுகின்றன. ஒன்று, படித்தவர்கள் வேலைக்குப் போக முயலுகிறார்கள், ஆனால் படித்தவர்கள் அனைவருக்கும் கொடுக்க, வேலைகளில்லை. இரண்டவதாக, படிப்பின் தரம் மிகவும் குறைந்து இருக்கிறது.

இந்த இரண்டு காரணங்களையுஞ் சொல்லி, இப்பொழுதுள்ள கல்வி முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று, புதிய "தேசியக் கல்வி நிபுணர்கள்" கூறுகின்றனர். இந்த இரண்டு காரணங்களையும் சற்று ஆராய்ந்தால் அவை எவ்வளவு அபத்தமான வாதங்கள் என்பது தெளியப்படும்.

முதலாவதாகச் சொல்லும் காரணம், படித்தவர்கள் வேலைக்குப் போக விரும்புகிறார்கள் என்பதாகும். இது என்ன குற்றச்சாட்டு என்று புரியவில்லை. வேலைக்குப்

போவது பஞ்சமாபாதகங்களில் ஒன்றா? படித்து வந்தவன், வேலைபார்த்து வாழ்க்கை நடத்த முயலுவதில் தவறென்ன இருக்கிறது? படித்தவர்கள் வேலைக்குப்போக ஆசைப்படுவதைக் கண்டித்துப் பேசுகிறார்களே! படித்தவர்கள் என்ன செய்யவேண்டுமென்றுதான் இவர்கள் சொல்கிறார்கள்? ஆடு மாடுகள் நீண்டநேரம் புல்வெளியில் மேய்ந்துவிட்டுப் பின் மரத்து நிழலில் படுத்து அசைபோட்டுக்கொண்டிருக்கும், அதைப்போல பத்தாண்டு பதினைந்தாண்டு காலம் படித்துவிட்டு, பின் வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து "ஷேக்ஸ்பியர் இப்படிச் சொன்னார்! ஹோமர் அப்படிப் பாடினார்! அக்பர் காலத்தில் வரிவசூல் எப்படி நடந்தது? அமெரிக்காவில் பதினெட்டாம் நூற்றாண்டில் என்னென்ன நடந்தன?" என்று எண்ணிக்கொண்டு அசைபோடும் ஆடுமாடுகளைப்போல படித்தவர்கள் இருக்க வேண்டுமென்று இவர்கள் கூறுகிறார்களா? படித்தவன் வேலைக்குப்போக விரும்புகிறான், அது கூடாது என்று கூவுபவர்கள், படித்தவர்களை என்னதான் செய்யச்சொல்கிறார்கள், அத்துடன் இப்பொழுது இருக்கிற வேலைகளை யாரைக்கொண்டு பார்க்கவேண்டுமென்று விரும்புகிறார்களென்றும் தெரியவில்லை.

உயர்தரப் படிப்புப் பெற்றவர்கள் மாதத்துக்கு ஆயிரம் இரண்டாயிரம் என்று ஊதியம் பெற்று உல்லாசமாக வாழவேண்டுமென்று பேராசைப் படக்கூடாது என்று வேண்டுமானால் கண்டிக்கலாம். அதை விடுத்து, படித்தவர்கள் வேலைக்குப்போக நினைப்பது தவறு என்று எந்த வேலையும் தராமல் இருக்கத் திட்டமிடுவது கூடாது; அதனால் நாட்டுக்கு எந்த நன்மையுங்கிடையாது. அதிலும் ஒன்றுந்தெரியாதவர்கள், அரசியல் பெயராலோ, பணவசதியினாலோ உயர்ந்த பதவிகளில் அமர்ந்து ஆர்ப்பாட்டஞ்செய்யும்பொழுது, படித்தவர்களும் பொறுப்பை ஏற்று நடத்தும் திறமையுள்ளவர்களும் உயர்ந்த வேலைகளில் இருக்க ஆசைப்படுவதில் குற்றம் என்ன? படித்தவர்கள் வேலைக்குப் போகக்கூடாது என்று சொல்வதைவிட்டு, படித்தவர்கள் ஒவ்வொருவரையும் நாட்டுக்குப் பலன் தரும் ஒவ்வொரு வேலையில் வைக்கவேண்டும். படித்தவன், தொழில் நுட்பங்கள் தெரிந்தவன் சோம்பேறியாக வாழ அனுமதிக்கக் கூடாது. ஒருபுறம், ஆசிரியர்கள் தேவை! டாக்டர்கள் தேவை! என்ஜினியர்கள் தேவை! என்று ஐந்தாண்டுத் திட்டக்குழுவினர் கூறுகின்றனர், மற்றொருபுறம் உயர்தரக் கல்வி எதற்கு? படித்தவர்கள் வேலைபார்க்க ஏன் ஆசைப்படவேண்டும்? என்றுகேள்விகள் எழுப்பப்பட்டு கல்வி முறையை மாற்றியமைக்கயோசனைகள் தரப்படுகின்றன.

இப்பொழுதுள்ள கல்வி முறையை மாற்றியமைக்க விரும்புபவர்கள் கூறுகிற இரண்டாவது காரணம் படிப்பின் தரம் குறைந்துவிட்டது என்பதாகும். இதை எப்படிச் சொல்கிறார்கள் என்பது தெரியவில்லை. படிப்பின் தரம் குறைந்துவிட்டதென்று, இவர்கள் தரும் "புதிய கல்வித் திட்டங்களைப்" பார்த்தால், இப்பொழுது இருக்கிற தரத்தை தாழ்த்திவிடும் விதத்தில்தான் அவை இருக்கும். கல்வி முறையைமாற்றிவிடவேண்டுமென்பதற்காக, படிப்பின் தரம் குறைவானதுஎன்று இப்பொழுது தேசியத் தலைவர்கள் கூறியபோதிலும், சுதந்தரப் போராட்ட காலத்திலும், சுதந்திரம் பெற்ற பின்னும், வெள்ளையனுக்கு எதிராக வைக்கப்பட்ட பலர் இந்தக் கல்வி முறையில் உருவாகி வெளிவந்தவர்கள்தாம். காங்கிரசும், காங்கிரஸ் தலைவர்களும், இந்தக் கல்வி முறையில் உருவானவர்களே!! **காந்தி, மோதிலால் நேரு, சி. ஆர். தாஸ், தாகூர், பண்டித நேரு, கவியரசி சரோஜினி, சீனிவாச சாஸ்திரி, சர். சி. பி, ஆர். கே. சண்முகம், சர். ஏ. இராமசாமி, டாக்டர் ஏ. இலட்சுமணசாமி, கரியப்பா, தேஷ்முக்,** இவர்களெல்லாம், இப்பொழுது தாழ்வாகக் கருதப்படும் கல்வி முறையில் வெளிவந்த உயர்ந்த மணிகள்! "வெள்ளையன் போய்விட்டால் எங்களால் திறமையாக ஆளமுடியும், வெள்ளையருக்கு நிகரான அறிவாளிகள் எம்மிடம் உளர்" என முதலில் காங்கிரசும், பின் காங்கிரசு அரசாங்கமும் பெருமைப்பட்டதெல்லாம், இருக்கிற கல்வி முறையில் வளர்ந்தவர்களை வைத்துக்கொண்டுதான்!

இப்பொழுதுள்ள கல்வி முறையில் குறைபாடுகளே ஏதுமில்லை என்று எவரும் கூறவில்லை. குறைபாடுகளை நீக்கி இருக்கும் கல்வித்துறையை வளமாக்குவதைவிட்டு, இருக்கிற கல்வி முறையை அப்படியே பெயர்த்தெடுத்து எறிந்துவிட்டு, புத்தம் புதியதாக ஒரு "தேசிய" கல்வித் திட்டத்தை புகுத்தத் தேசியத் தலைவர்கள் பாடுபடுகிறார்கள். "தேசியக்கல்வித் திட்டம்" என்பதற்கான பண்பு, இந்த தேசத்தைச் சேர்ந்த ஒருவர் சொல்கிறார் என்பதைத் தவிர, தேசத்திற்கோ, தேச மக்களுக்கோ பயனளிக்கும்படியான அறிகுறிகள் எதுவும் அந்தத் திட்டங்களில் இருப்பதில்லை.

கல்வித்துறையில் ஒருநாடு முன்னேறுகிறதென்றால், பெரும்பாலானமக்களுக்குக் கல்வியறிவு தரப்படும், உயர்தரக் கல்விபெற்று நாட்டுக்குப் பயன்படும் விதத்தில் உள்ளவர் தொகை உயரும் என்று எல்லோரும் எதிர்பார்ப்போம். கல்வி வளர்ச்சி என்றாலும் அதுதான் பொருள். ஆனால் இதற்கு நேர்மாறான கருத்தை இந்தியக் கல்வி முறைபற்றிப் பேசிய ஒருவர் தெரிவித்துள்ளார். ஒருவர் என்றால் பொறுப்புவாய்ந்தவர், பெரும் பதவியில் இருந்தவர்—இருப்பவர், இதுவரை ஐதராபாத் முதலமைச்சராக இருந்து, மாநிலப் புது அமைப்பின் பின் திருவாங்கூர் கவர்னராக உயர்த்தப்பட்டுள்ள பி. இராமகிருஷ்ண ராவ் அவர்கள், உசுமானியப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கீழ்கண்டவாறு பேசியுள்ளார்.

**"தற்பொழுதுள்ள உயர்தரக் கல்வியை இந்தியா முழுவதும் பரப்ப முயன்றால், அந்தமுயற்சி தோல்வியடைவது நிச்சயம். ஆதலால் இன்றுள்ள நிலையில் உயர்தரக் கல்வி ஒரு சிலருக்கு மட்டும் கிடைப்பதாகக் குறைந்த அளவில் இருக்க வேண்டும்."**

நாட்டின் வளர்ச்சியில் நாட்டங்கொண்டோர் கல்விக் கூடங்கள் பெருகவேண்டும், ஆரம்பக்கல்வியிலிருந்து உயர்தரக் கல்விவரை எல்லோருக்கும் கிடைப்பதற்கான வழி செய்யவேண்டும் என்று சொல்வார்கள். ஆனால் உயர்தரக் கல்வி ஒரு சிலருக்குக் கிடைத்தால் போதும் என்று திருவாங்கூர் கவர்னராக வரப்போகும்

இராமகிருஷ்ண சொல்கிறார். அதற்குமேல், உயர்தரக் கல்வியை எங்கும் பரப்ப முயன்றால், தோல்வி நிச்சயமெனப் பயமுறுத்துகிறார்.

உயர்தரக்கல்வி கூடாது என்று திருவாங்கூர் கவர்னர் பெருமான் கூறிவிடவில்லை. உயர்தரக் கல்வி இருக்கட்டும், ஆனால் அது ஒரு சிலருக்குமட்டும் கிடைப்பதாக இருக்கட்டும், என்று கல்வி கற்பவர்களின் எண்ணிக்கைக்கு வரம்பு கட்ட நினைக்கிறார். மக்கள் தொகையில் நூற்றுக்கு எண்பது தொன்னூறு என்று உயர்தரப் படிப்புப் பெறவேண்டியதில்லை, நூற்றில் ஐந்து அல்லது பத்துப் பேர்கள் மட்டும் உயர்தரக் கல்வி பெற்றால்போதும், அதற்குமேல் பெறக்கூடாது என்கிறார். இராமகிருஷ்ணாவின் யோசனையைக் கூர்ந்துகவனித்தால், வர்ணாசிரமத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் வெளிவதைக் காணலாம், வர்ணாசிரம காலத்தில், சமூகத்தில் ஒரு சிலர் மட்டும் வேதம் படித்தால் போதும் என்று ஏற்படுத்தியிருந்தார்கள். இன்று இராமகிருஷ்ண ராவ் சொல்வதைப்போலத்தான் அந்தக் காலத்தில் வசிட்டரும் பதஞ்சலியும் சொல்லியிருப்பார்கள் "எல்லோரும் வேதம் படித்து என்னசெய்யப் போகிறீர்கள்? ஒரு ஐந்துபேர் வேதம் படித்தால் போதும், மற்றவர்கள் வேறுவேலைகள் பார்க்கட்டும்" என்று. ஒரு குறிப்பிட்ட சிலர் மட்டும் படித்தால் போதும் என்பதிலிருந்து, குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டும்தான் படிக்கலாம், என்று வர்ணாச்சிரம திட்டத்தில் வளர்ந்தது. கல்வி ஒரு வகுப்புக்கு மட்டுமே பலனளிப்பதாக ஆக்கப்பட்டது. மற்ற பெரும்பான்மை மக்கள் கல்வியறிவற்றவர்களாய் வாழ்ந்தனர். அத்தகைய வர்ணாச்சிரம காலத்துக்கு நாட்டைத் திருப்பியனுப்பும் யோசனையை இராமகிருஷ்ண ராவ் சொல்லியிருக்கிறார்.

கல்வி வளர்ச்சி ஏற்பட்டால், சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்ளும் பண்பு போய்விடும் குற்றங்குறைகளைக் கண்டு கேள்வி கேட்டு, ஆராய்ந்து பார்த்து, ஆட்சியாளர் மீது தமது கோபத்தை மக்கள் திருப்பலாம். கல்வி நிலை உயர்ந்தால், அதிகாரம் எதேச்சாதிகாரப் போக்கில் நடைபெற முடியாது. தட்டிக்கேட்க ஓரிருவர் எழுந்துதான் வருவர்.

அறிவு வளர்ந்தால் அரசியலுலகில் தங்களுக்கு ஏற்படக்கூடிய எதிர்ப்பை மனதில் வைத்துதான், இராமகிருஷ்ண ராவ் அவ்வாறு பேசியுள்ளார் என்பது, அவருடைய பேச்சின் கடைசிப் பகுதியைப் பார்த்தால் தெரியும். பட்டமளிப்பு விழாப் பேச்சின் இறுதியில், கல்லூரி மாணவர்களுக்குக் கூறும்பொழுது "அரசியல் பிரசாரத்துக்காக மாணவர்கள் பயன் படுத்தப்படுகிறார்கள். அதனால் மாணவர்களின் மனப்போக்கு மாறிவிடுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார். பிடிக்காத காரணத்தால், "அரசியல் பிரசாரத்துக்குப் பயன் படுத்தப்படுகிறார்கள். மனப்போக்கு மாறி விடுகிறது" என்று அவர் பேசுகிறார். மாற்றுக் கட்சியினர் அதையே மாணவர்களிடை அரசியல் ஆர்வம் இருக்கிறது, உள்ளப்பாங்கு உவகை யூட்டுவது என்று சொல்லிவிடலாம். எப்படிச் சொன்னபோதிலும், இன்றுள்ள நிலையில் கல்வி கற்போர் தொகை உயர்ந்தால், ஆட்சியினருக்குப் பிடிக்காத சூழ்நிலை உருவாகும்.

இந்திய அரசாங்கம் கல்வித் துறையில் செய்யும் மாறுதல்கள் எவரையும் திருப்திபடுத்தியதாகத் தெரியவில்லை. காந்தீயத்தைப் பின்பற்றுவதாகக் காங்கிரசுக்காரர்கள் சொல்லிக்கொள்வதால், காங்கிரசு அரசாங்கம் காந்திய அடிப்படையில் கல்வித் திட்டத்தை மாற்றியமைப்பதாக ஒருபுறம் கூறுகிறது. ஆனால் பழுத்த காந்திய வாதிகள் இந்திய அரசாங்கத்தின் கல்வித் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை, அதில் பெரும் பகுதி குற்றமுள்ளவையென ஒதுக்கித் தள்ளுகின்றனர். மற்றொருபுறம், ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கும் பொழுது, மேனாட்டு முறையில் வளரும் கல்வித் திட்டத்தை விரிவுபடுத்த முயலுகின்றனர். ஆனால் அந்த முயற்சிகள், மேனாட்டுக்கல்வி முறையில் சிறந்த அனுபவமுள்ள சர்.ஏ. இலட்சுமண சாமி போன்ற பல்கலைக் கழகத் தலைவர்களிடம் ஆதரவு பெறுவதில்லை, எனவே இந்திய அரசாங்கத்தின் கல்வி மாறுதல்கள் இருபாலாரிடத்தும் எதிர்ப்பையே வரவழைக்கின்றன. காந்தியக் கல்வி முறையில் நிபுணரென்று கருதப் படுபவரும், முன்பு காந்தியாரின் "அரிஜன்" பத்திரிக்கைக்கு ஆசிரியராக இருந்தவருமான மகன் பாய் தேசாய் என்பவர், கல்வித் துறையில் இந்திய அரசாங்கத்தினர் கொண்டுள்ள உறுதியற்ற கொள்கையை கண்டிக்கிறார். அண்மையில் ஆமதாபாத்தில் அவர் பின்வருமாறு பேசியுள்ளார்.

"இரும்புத்தொழிற்சாலைகள், சிமெண்டு உற்பத்தி சாலைகள், அணைக்கட்டுகள், நீர்ப்பாசன அமைப்புகள், இவைகளைத் திட்டமிடுவதில் நமது அரசாங்கம் அதிக அக்கரைகாட்டி வருகிறதேயன்றி, அந்தத் தொழிற்சாலைகளையும் திட்டங்களையும் திறம்பட நடத்துவதற்கான கல்வியறிவை மக்களுக்குத்தர அரசாங்கம் அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. இதனால் உருவாக்கப்படும் பெரும் திட்டங்கள் பெரிய ஆபத்துக்கு இலக்காக போகின்றன. திட்டங்கள் உருவானதும், ஒன்றுமே தெரியாதவர்கள் கையில் அவை சிக்கிச் சீரழியப் போகின்றன."

அரசாங்கத்தின் தெளிவற்றக் கல்வித் திட்டங்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது,

"அரசாங்கமும், மந்திரிகளும் கல்வி முறையைப் பற்றிய வரையில் குழப்பத்துடனும். நம்பிக்கையில்லாமலும் இருக்கின்றனர். அவர்கள் சொல்வதொன்றும், செய்வது வேறொன்றுமாக இருக்கிறது" என்று அவர் கூறுகின்றார். அரசாங்கத்தினரின குழப்பம் மகன்பாய் தேசாய் போன்ற காந்தியவாதிகளே கண்டிக்கு மளவுக்கு வளர்ந்திருக்கிறது. பெரும் அணைக்கட்டுகளையும், திட்டங்களையும் நிறைவேற்ற வேண்டுமென்று இந்தியஅரசாங்கமும் காங்கிரசுக்காரர்களும் ஒருபுறம் ஆசைப்பட்டபோதிலும், மற்றொரு புறம் திட்டங்களை நிறைவேற்றி நடத்திச் செல்வதற்கான கல்வியறிவை மக்களுக்குத்தர அவர்கள் மறுக்கின்றனர்.

இன்று ஆட்சிபீடத்தில் அமர்ந்திருப்போர், மக்களிடை அறிவு வளருவது காண அஞ்சுகிறார்கள்; மக்கள் அறியாமை இருளில் தள்ளப்பட்டால்தான் தங்கள் எதேச்சாதிகாரம் இன்பம் பயக்கும் என்று எண்ணுகிறார்கள். இருளில் இன்பம் தேடுகிறார்கள்!! ★

6-ம் பக்கத் தொடர்ச்சி

கொடுமதியுடையோய்! எதையோ சொல்லி வருகிறாய் என்றெண்ணிப் படித்துக்கொண்டே வந்தால், இடையிலே நீ எமது தலைவர்களை இழித்துப் பேசும் கட்டத்தைப் புகுத்துகிறாயே, பித்தர்களின் பேய்ச் செயலைப்பற்றிக் குறிப்பிட்டு விட்டு, எமது 'மூவர்' பற்றிப் பேச வருகிறாயே, அங்ஙனமாயின், எமது 'மூவர்' பித்தர் என்று கூறவா துணிகிறாய், விடமாட்டோம் உன்னை... என்று கோபத்துடன் கூறிடக்கிளம்பும் காங்கிரஸ் நண்பர்கட்கு, என் விளக்கத்தைத் துவக்கத்திலேயே கூறிவிடுகிறேன் — நான் காட்டிய நிகழ்ச்சியில், விவரமறியாச் சிறுவர்கள் கட்டிப் போடப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, கொடியவர் இருவரின் பயங்கர ஆயுதங்களுக்கு இரையாகும் ஆபத்துக்கு உட்படுத்தப்பட்டார்களே, அதுவரையில்தான், நம் நாட்டு அரசியல் நிலைமையுடன் ஒப்பிடத்தக்கதாக இருக்கிறது என்று கூறிவிடுகிறேன். இத்தாலி நாட்டிலே இரு பித்தர்கள் செய்த வெறிச் செயல் போன்றதோர் நடவடிக்கை தமிழக அரசியலிலும் இதுபோது நடைபெற்றுக்கொண்டிருப்பதாக எனக்குத் தோன்றுகிறதே தவிர, இங்குள்ள காங்கிரஸ் தலைவர்கள், பித்தர்களாகத் தெரிகிறார்கள் என்று கூறவில்லை. எனவே நமது தலைவர்களைப் பித்தர் என்று தூற்றுகிறேனோ என்றெண்ணிக் கோபம் கொள்ளற்க! என்று நான் கூறுவதாகத் தம்பி! காங்கிரஸ் நண்பர்களுக்குச் சொல்லிவிடு. நமக்கேன் நல்லவர்களின் பொல்லாப்பு!

இத்தாலி நாட்டு இருபித்தர்கள் பள்ளிச் சிறுர்களைக் கட்டிப் போட்டு கத்தி காட்டி, கொன்று போடுவதாக மிரட்டி, பணத்தைக் கொள்ளை அடிக்க முயற்சித்தது போல, இந்நாட்டு மக்களைத் தெளிவுபெறாத நிலையில் தள்ளி வைத்துவிட்டு, அடக்குமுறை, பணபலம் எனும் இரு பயங்கரக் கருவிகளைக் காட்டி, அழித்தொழித்து விடுவதாக மிரட்டி, காங்கிரஸ் கட்சியினர் ஓட்டுகளைக் கொள்ளையிடத் திட்டமிட்டு வேலை செய்து வருகின்றனர். மற்றவர்கள் திகைத்துப்போய், செயலற்றவர்களாகிக் கிடந்தபோது ஓர் ஆரணங்கு, அஞ்சாது போராடி, கொடியவர்களின் கொலைபாதகச் செயலைத் தடுத்து வெற்றி கண்டதுபோல, நாம், இந்தத் தேர்தலிலே, காங்கிரசை எதிர்த்து நிற்கிறோம். அந்த ஆரணங்குக்கு இருந்த அஞ்சா நெஞ்சம், நம்மில் ஒவ்வொருவருக்கும் தேவை—எங்ஙனம், கயவர்களிடம் கத்தி இருக்கிறதே, காட்டுக் கூச்சலிடுகிறார்களே, துப்பாக்கி இருக்கிறதே, துடுக்குத்தனமாகத் தாக்குகிறார்களே, என்பதுபற்றித் திகில் கொள்ளாமல் அந்த மங்கையர் திலகம், கொடியவனின் கொடுவாளைப் பறித்து எறிந்தாளோ, அதுபோல் செயலாற்ற, நமக்குத் துணிவு வேண்டும். ஏனெனில் துரைத்தனத்தில் அமர்ந்துள்ளவர்களிடம், படைக்கலன்கள் மிகுதியாக உள்ளன என்பதுமட்டுமல்ல, அவர்களில் மிகப் பலருக்கு, வெறி அளவுக்கு நம்மீது கோபம் பிறந்துவிட்டிருக்கிறது. அதிலும் நம்மை எல்லாம் ஆளாக்கிவிட்ட பெரியாரையே அன்புக் கயிற்றினால் கட்டிப்போட்டுவிட முடிந்தது இந்தப் 'பொடியன்கள்' அல்லவா போரிடக் கிளம்புகிறார்கள் என்று எண்ணும்போதே அவர்களுக்குக் கோபம் கோபமாக வருகிறது. அது நமக்கு நன்றாகப் புரிகிறது! கடந்த பத்து நாட்களாக, பவனி வரும் 'மூவர்' செல்லுமிடமெல்லாம் சீறிச்சீறிப் பேசுகிறார்கள் — இதுகளை ஒழித்துக்கட்டுவோம் என்று உறுமுகிறார்கள்! தேர்தலுக்காகச் செலவிடத் தம்மிடம் குவிந்துகிடக்கும் பணத்தையும், மேலும் இலட்சக் கணக்கில் கொட்டித்தர, கொள்ளை இலாபக்காரரும் கள்ள மார்க்கட் அதிபரும் காத்துக் கிடக்கும் காட்சியையும், தமது வீர தீரம், அறிவு ஆற்றல், பக்தி யுக்தி பற்றி எல்லாம் புகழ்பாடிட, பத்திரிகைகள் பல பராக்குக்கூறிக் கிடப்பதையும் காணும்போது அவர்களுக்கு ஏன் அந்த அளவுக்கு ஆணவம் பிறக்காது. அம்மி குழவியையே அப்பளமாக்கிவிட்டோம், இந்த இஞ்சி பச்சடிகள் எம்மாத்திரம் என்று எக்காளமிட்டு வருகிறார்கள்.

கொப்பம்பட்டியிலே தமது 'குரலை' உயர்த்திய காமராஜர் ஒரு பத்து நாள் படபடவெனப் பேசிவிட்டு, அதன் பலனாக ஆயாசம் தவிர பிறிதொன்று காணாததால், சிறிதளவு அமைதி பெற்றார், வாய்மூடிக்கிடந்திடலானார். இப்போது, 'மூவர்' கிளம்பியுள்ளனர், முரசு அறைந்திட!

ஆஹா! தம்பி! இந்த 'மூவர்'களின் பொருத்தம் இருக்கிறதே, சொல்லி முடியாது.

பெரியார், நாட்டுக்கு ஒவ்வோர் நாளும் எடுத்துச் சொல்லிவருவது தெரியுமல்லவா? காமராஜர் நல்லவர், நம்மவர், ஆனால் இந்தச் சுப்பிரமணியம் இருக்கிறாரே, ஆபத்தான 'பேர்வழி'-ஆச்சாரியாரின் கையாள் —சமயம் பார்த்துக் குழி பறிப்பவர் —சந்தர்ப்பம் பார்த்துத் தட்சிணப் பிரதேசத் திட்டத்தைப் புகுத்திவிடக் காத்துக்கிடப்பவர்—என்பது பெரியாரின் ஆய்வுரை. அவர் கூறுவதற்கேற்பவே, காமராஜர் தட்சிணப் பிரதேசம் கேட்பவர்களைத் தாக்கிப் பேசினார், சுப்பிரமணியனார், தட்சிணப் பிரதேசத்தின் அவசியத்தைச் சிலர் உணராமலிருக்கிறார்களே, என்ன அறிவீனம் என்று கேலி பேசுகிறார்.

ஆச்சாரியாரின் குலக் கல்வித் திட்டத்துக்கு, கனம். சுப்பிரமணியம் தாலாட்டும் பாடினார், பிறகு அதை அவரே சவக்குழியில் புதைத்துவிட்டு, ஒப்பாரி வைத்தாலும், பதவி பறிபோய் விடுமோ என்ற அச்சத்தால், ஒரு சொட்டுக் கண்ணீரும்விடாமலிருந்துவிட்டார்.

ஆச்சாரியார் காலத்திலே இந்த ஆற்றல்மிக்க அமைச்சர், கொதித்ததையும் குதித்ததையும், நாடு கண்டது. குலக் கல்வித் திட்டத்தை இந்தக் கொள்கை வீரர், விட்டுக்கொடுக்கவே மாட்டார், பதவிப் பிசின் அவரை ஒன்றும் செய்யாது, தன்மானம் பெரிது, கேவலம் பதவி அல்ல என்று கருதும் தமிழர் இவர், இவரிடம் கொங்குநாட்டு உறுதிப்பாடு உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது, என்று பலரும் கருதும்படி பேசினார்—மறுப்புக் கூறினோரை ஏசினார்! கல்வித் துறையில் இந்தத் திட்டத்தைப் புகுத்தாவிட்டால், இந்த 'ஜென்மம்' கடைத்தேறாது என்று 'கர்ஜனை' செய்தார்.

நாடு சிறிற்று—காமராஜர் கண் சிமிட்டினர் — காங்கிரஸ் கமிட்டிகளே களமாயின! ஆச்சாரியார் கவிழ்ந்தார்—காமராஜர் துறவறத்தைத் துறந்து, தமது ஓய்வைத் தியாகம் செய்துவிட்டு, பதவியில் வந்து அமர்ந்தார்; பக்கத்திலேயே பல்லை இளித்துக்கொண்டு நின்றூர் இந்தப் பண்பாளர்! நான், நாட்டுக்குத் தந்த நல்ல திட்டத்தை, ஆயிரம் எதிர்ப்புகளையும் கண்டு நான் அஞ்சாமல் திணித்த இந்தத் திட்டத்தைக் குப்பைக் கூடையில் போட்டுவிட்ட இந்த அமைச்சர் அவையில் நான் இடம் பெற்ருல், எவர்தான் என்னை மதிப்பர், காலம் முழுவதும் கைகொட்டிச் சிரிப்பரே, பதவி மோகம் விட்டதா பார் என்று கேலி பேசுவரே நான் எப்படி இந்த அமைச்சர் அவையில் இருக்கலாம்—வேண்டேன்! என்று கூறிவிட்டு, கோவை சென்று, வக்கீல் வேலையை விட்ட இடத்திலிருந்து துவக்குவார், குருநாதர் இராமாயணம் பற்றி எழுத இவர் பாரதம் பற்றி எழுதுவார், என்று பலரும் எதிர்பார்த்தனர்.

ஆனுல் அமைச்சர் பதவி என்ன சாமான்யமானதா! அந்த வெல்வட்டு மெத்தையின் சுகம் வேறு எங்கு கிடைக்கும்! ஆனந்தமாக அங்கு அமர்ந்துகொண்டு, அலட்சியமாக மற்றவர்களைப் பார்த்துக்கொண்டு, ஆணவமாக எவரையும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசிடும் வாய்ப்பை இழக்க மனம் வருமா! பில்லை போட்ட சேவகர்கள் எத்துணை பேர்! பிரியத்தைக் கொட்டிடத்துடிப்போர் எத்துணை! சீமான்கள், கட்டியங் கூறி நிற்கிருர்கள், காலையையும் தன்னையும் ஒரே விதமாகப் பார்த்து வந்த பட்டக்காரர்களெல்லாம், 'கனம்' ஆன பிறகு, கைலாகு கொடுக்கிருர்கள், கொடுத்துவிட்டு, கை வலிக்கிறதோ!—என்று கனிவுடன் கேட்கிருர்கள்! இந்தச் சுகானுபவத்தை இழக்க மனம் வருமா! தோட்டக் கச்சேரிகள், அதிலே வந்து கலந்துகொள்ளும் துதிபாடகர்கள்! மாநாடுகள், அதிலே, மதிப்பளிக்க வரும் மகானுபாவர்கள்! கலைக் காட்சியைத் திறந்திட, கான மழையில் நனைந்திட 'கனம்' ஆக இருந்தால், தனிக் கவர்ச்சி காணலாமே! இசைவாணரிடமே இசை இலக்கணம் பற்றிப் பேசி, ஆசான் கோலமே காட்டலாம்! தமிழ்ப் பேராசிரியரிடமே, தமிழ்மொழியில் என்ன இருக்கிறது என்று கேட்டுவிட்டு, அவர் முகம் சுளிக்கிறதா என்று கூடக் கவனிக்கலாம்! நடனக் கச்சேரிகளில் தலைமை தாங்கி, "மனிதனைத் தேவனுக்கும் மதுரமான கலை! அம்பலத்தானின் அடிபணியும் பக்தியை ஊட்டும் லளிதக் கலை! கண்டேன்! களிப்புக் கடலில் மூழ்கினேன்! அந்தக் கட்டிளங்குமரியின்கடைவெட்டினையும் இடை நெளிவையும் கண்ட போது, நான் கைலை சென்றது போன்றே களிப்புப்பெற்றேன்" என்று பேசலாம்! தம்பி! இவ்வளவு இன்பம் கூட்டித்தரும் பதவியை இழக்க அவர் என்ன இளித்த வாயரா?

கல்வித்திட்டம் வேண்டாம் என்கிறீர்கள், அவ்வளவுதானே! உங்களுக்குக் கல்வித் திட்டம் பிடிக்கவில்லை, நான் அல்லவே! சரி! கல்வித்திட்டம் வேண்டாம்! அதைக் குழிதோண்டிப் புதைக்கத்தானேவேண்டும். உமக்கு ஏன் அந்தச் சிரமம், நானே செய்கிறேன் — எனக்குத்தான் அந்தக் குழி எத்துணை ஆழமாக இருக்க வேண்டும் என்பது தெரியும்—என்று கூறினுர்போலும், பதவியில் ஒட்டிக்கொண்டார்!

அப்படிப்பட்ட தன்மானம் ததும்பும் மனம், தம்பி, இந்த அருமை அமைச்சருக்கு!

அவ்ருடன், காமராஜர்! ஊரிலே, பெரியார் பேசுவதோ, நான், கனம். சுப்பிரமணியம் ஆச்சாரியாரின் கை ஆளாக இருந்துகொண்டு, என் காமராஜரைக் கவிழ்த்துவிடாதபடி பாதுகாப்பு அளித்து வருகிறேன், என்பதாகும்.

காமராஜர், பெரியார்மீது அன்பும் பொழிவதில்லை, வம்புக்கும் நிற்பதில்லை.

கனம். சுப்பிரமணியனுரோ, தனக்குப் பெரியார்மீது மட்டுமல்ல திராவிட இயக்கத்தின்மீதே உள்ள, 'துவேஷத்தை'க் கூட்டம் தவருமல் கக்குகிருர், கூட இருப்பவர்கள், மெத்த நாற்றமடிக்கிறது என்று கூறித் தடுக்கும் வரையில் கக்கித் தீர்க்கிருர்.

அவர் இருக்கிருரே, பக்தவத்சலனுர்—சொல்லத்தேவை இல்லை! மக்கள் பார்த்து, சட்டசபைக்கும் செல்லவிடமாட்டோம் என்று கூறி, தேர்தலில் தோற்கடித்தார்கள், எம். எல். ஏ. ஆகத்தானே கூடாது என்றீர்கள், இதோ பாருங்கள் மந்திரியே ஆகிவிடுகிறேன் என்று ஜனநாயகம் செய்து காட்டிய பெருந்தகையாளர்!

இந்த மூவரும் முரசுகொட்ட, ஊர்பல சென்றனர். உள்ளத்துக்கு உற்சாகம் பொங்குமளவுக்கு, திராவிட முன்னேற்றக் கழகத்தை ஏசினர் — நான்தான் இருக்கிறேனே, ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பார்களே, அதுபோல; என்னை எடுத்து அலசி, ஆராய்ந்து, உரைத்து, நிறுத்து, தூக்கி எறிந்துவிட்டார்கள், கீழே!

வடக்கு—தெற்கு என்று பேசுவது அபத்தம்—ஆபத்து—தீது—அப்படி ஒரு பிரச்சினை கிடையாது.

> அப்படியே ஒன்று இருந்தாலும், அதைக்கண்டு அச்சம்கொள்வதுகோழைத்தனம்.
>
> இந்த தி. மு. க. கோழைகள்; வெள்ளைக்காரனுக்குக் குலாம்கள்!
>
> இவர்களை ஒழித்துவிடுவோம், அழித்துவிடுவோம்.

மூவர் முரசும் இதைத்தான் ஒலித்தன! இதை ஒலிக்கமட்டுமே இவர்கள் பயின்றுள்ளனர்.

ஆனுல் மக்கள் வேறுபல இசைகளைக் கேட்டுப் பழக்கப்பட்டுப் போய்விட்டனர்.

"அண்ணுத்துரை கிடக்கிருனய்யா, அமைச்சர் பெருமக்களே! உங்கள் சங்கதி என்ன? நாடு ஆளும் வாய்ப்பு அளித்தோம் நாங்கள் கண்டது என்ன? வரிச் சுமையைத் தாங்கித் தத்தளிக்கிறேம், வாட்டம் ஓட்ட நீவிர் வகுத்தளித்தது என்ன? தி. மு. க. இதைச் சொல்கிறது கேளாதீர், அதைக் கூறுகிறது நம்பாதீர் என்று எங்களுக்குப் போதனை புகட்டியது கிடக்கட்டும்—நாங்கள்,

> எப்பொருள் யார் யார் வாய்க்
> கேட்பினும் அப்பொருள் மெய்ப்
> பொருள் காண்பது அறிவு

*எனும் குறள் வழி நடக்கத் தெரிந்தவர்கள்—எனவே எந்தக் கழகமும் இல்லாதது கூறி எம்மை ஏய்த்திட முடியாது! உண்மையை நாங்கள் தெரிந்துகொண்டோம்.*

**உமது ஆட்சி எமக்குத் திருப்தி தரவில்லை.**

**ஊழல், நாற்றமடிக்கிறது.**

**உழைப்பாளிக்கு உரிமை மறுக்கப்படுகிறது.**

**விலைவாசியைக் கட்டுப்படுத்தும் வக்கும் உமக்கு இல்லை.**

**அடக்குமுறையை அவிழ்த்து விடுகிறீர்கள்.**

**வரிமேல் வரி போட்டு வாட்டி வதைக்கிறீர்கள்.**

**வட நாட்டிலே அதிகாரத்தைக் குவித்திருக்கிறார்கள்.**

**எதற்கும் காவடி தூக்கிக்கொண்டு டில்லி போகிறீர்கள்.**

**வளமும் செல்வமும் வட நாட்டில் பெருகிக்கிடக்கிறது.**

**தென்னகம், தொழில் வளர்ச்சியற்றுத் தேய்கிறது.**

**புதிய புதிய தொழிற் திட்டம் தீட்டும் உரிமை சென்னையிடம் இல்லை, — டில்லியின் கரத்தில் இருக்கிறது.**

**அணையும் தேக்கமும் அங்கு, பிரம்மாண்டமான அளவு.**

**இங்கு பாசனத்துக்காகச் சிறு அணைகள் — அதற்கும் மக்களிடம் அதிகாரப் 'பிச்சை' எடுத்தீர்கள்.**

**முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், தென்னகத்துக்குச் செய்யப்பட்ட அநீதியை, 'தேசிய' ஏடுகளே காட்டின — கட்டுரை, கவிதை, படம், போட்டு; நீங்களேகூடச் சில நேரங்களில் கண்ணைக் கசக்கிக்கொண்டும் கையைப் பிசைந்துகொண்டும், சொல்லியிருக்கிறீர்கள்!**

**தமிழகத்தின் உரிமையைக்கூடக் காப்பாற்றும் ஆற்றல்உமக்கு இல்லை; தேவிகுளம் பீர்மேடு இழந்தீர்கள்.**

**உம்முடைய வார்த்தைக்கு டில்லி மதிப்பளிக்கவில்லை; மானம் பெரிது என்று கருதி பதவியைத் துறக்கப் போவதாக 'பாவனை'க்குச் சொல்வதற்கும் பயந்தீர்கள்!**

**ஒரு முதியவர், சாவது தெரிந்தும், ஈவு இரக்கமற்று இருந்தீர்கள்.**

**தமிழ்நாடு என்று பெயரிடும் அளவுக்கும் உமக்குத்தன்மான உணர்ச்சி இல்லை!**

*ஆகவே அமைச்சர்களே! அண்ணாத்துரை கிடக்கிறான், அற்பன் அவனுக்கு அரசியல் என்ன தெரியும், சினிமா வசனம் எழுதுபவன், பிளேட்டோவுக்குப் பெயர் கிடைத்ததே, நீவிர் அவர் காலத்தில் இல்லாததால்; அரிஸ்டாடிலுக்கு அறிவாளி என்ற பெயரே, உண்மை மறந்ததால் தந்தனர்—அது தெரியும் எமக்கு — எனவே, அவனைத் தள்ளிவிட்டு, தயவு செய்து இதோ நாங்கள் கேட்கிறோமே, எங்கள் உள்ளத்தில் குமுறிக்கொண்டிருக்கும் பிரச்சினைகளை, இவைகளுக்கு, ஒளிவு மறைவு இன்றி, உள்ளத் தூய்மையுடன் பதிலளியுங்களேன் என்று பொதுமக்கள் கேட்கிறார்கள்*

*மக்களைக் காணும்போதே இந்தச் சூழ்நிலை புரிந்துவிடுகிறது, மூவருக்கும் சுரீல் என்று கோபம் கிளம்புகிறது, கோபத்தைக் காட்ட வேறு வழி? நம்மீது காய்ந்து விழுகிறார்கள்.*

*மூவர் முரசு, சென்ற கிழமை மிக மும்மரமாக வேலை செய்தது— இம்முறையில்.*

*இதிலே, காமராஜர், இப்போது ஒரு புதிய கட்டத்தில் அடி எடுத்து வைத்திருக்கிறார். நான் இதனை எதிர்பார்த்தேன், ஆனால் இவ்வளவு விரைவில் நடைபெறும் என்று நினைக்கவில்லை.*

*இதுநாள் வரையில், அவர், தமது கோபப் பார்வையையும், அலட்சியமான கண்டனத்தையும், நம்மீது மட்டும்தான் செலுத்தி வந்தார். இப்போது, காலம் கனிந்துவிட்டது என்று எண்ணுகிறாரோ, என்னவோ, மெதுவாக பெரியார் மீதும், திராவிட கழகத்தின் மீதும்கூடத் தமது தீநாவைச் செலுத்தத் தொடங்கிவிட்டார்.*

*காமராஜருக்கு, நமது கழகத்தின் மீது கசப்பும் கொதிப்பும் இருக்கக் காரணம் இருக்கிறது— சிச்சீ! இந்தப் பழம் புளிக்கும்! என்று நரியே சொல்லிற்றுமே, (கதையில்) இந்த நாடாளும் நாயகர் சொல்லாமலா இருப்பார்! நாம், தனியாக எம்மிடம் ஒரு கட்சி இருக்கும், திட்டம் இருக்கும், கொடி இருக்கும், ஆனால் உமக்குத்தான் அவ்வளவும் பயன்படும் — என்று கூறி 'குத்தகைக்கு' விடவில்லை, நமது கழகத்தை!!*

*கண்ணீரும் செந்நீரும் கொட்டி வளர்த்த இந்தக் கழகம், விசுவாமித்திரனிடம் ராஜ்யத்தைத் தானமாக்கிவிட்டு, சுடலை காக்கச் சென்றானே அரிச்சந்திரன், அவ்விதம், காமராஜருக்குக் காணிக்கையாக்கிவிட்டு அவருடைய திருவைப் பாராட்டும் பஜனை வேலையை மேற்கொள்ளும், துணிவு பெறவில்லை.*

*முடிகிறதோ இல்லையோ, மூலைக்குச் செல்கிறோமோ, காலத்தின் துணைபெற்று வெல்லுகிறோமோ, அது வேறு பிரச்சினை — அது குறித்துக் கவலையற்று, தேர்தலில் போட்டியிடவே முடிவு செய்திருக்கிறோம். எனவே, காமராஜருக்கு, சென்றேன், கண்டேன், வென்றேன், என்று கூறுவதற்கான வாய்ப்பும் பாழாகிவிட்டதே என்பதனால், கோபம் கொப்பளிக்கக் காரணம் இருக்கிறது — சுடு மொழி பேசுகிறார். பேசட்டும். பெரியார் மீது, இழிமொழி வீசக் காரணம் இருக்கிறதா! செய் நன்றி மறப்பவர் பற்றி வள்ளுவர் கூறியதைக் காமராஜருக்குக் கவனப்படுத்தும் ராஜவேலர்கள்கூடக் கிடைத்திருக்கிறார்களே! நான் எந்த நன்றியையும் கொல்வேன் என்று துணிந்து கூறுபவர் போலல்லவா, காமராஜர் பெரியார் மீதே கேலி வீசுகிறார்.*

*திராவிடர் கழகத்தின் வளர்ச்சியே பாழாவதானாலும் கவலையில்லை, நான் காமராஜரை ஆதரித்தே தீருவேன் என்று பெரியார் பேரார்வம் காட்டி, வருகிறார். அவருக்குக் காமராஜர் காட்டும் மரியாதை, நன்றி, என்னவிதமாக இருக்கிறது?*

*ஆச்சாரியார் மீது காமராஜருக்குக் கோபம் வந்தது. ஆச்சாரியார், காங்கிரசில் சர்வாதிகாரப் போக்கு வளர்ந்துவிட்டிருக்கிறது, சீரழிவு ஏற்பட்டு விட்டது என்று பேசுவது மறைமுகமாகத் தன்னைக் கண்டிப்பது என்று காமராஜர்*

(2-ம் பக்கம் பார்க்க)

REGD. NO. M. 4642 போன் நெ. 15




காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு திராவிடநாடு அச்சகத்தில்

Best copy ava